'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' (யோசு 24:15)

# நற்செய்திப் பணியாளர்

(சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களின் மாதச் செய்தி மடல்)

அருள் : XVI ஆகஸ்ட் கி.பி. 2025 சான்று : 188



## ஏற்றமடைந்த எதிர்நோக்கு – மரியா





## தம்பதியர்கள் வழிகாட்டல் பயிற்சி, நொச்சியோடைப்பட்டி





## புதிய பணியாளர்கள் பயிற்சி



புதுக்கோட்டை



இராம்நாடு



பட்டுக்கோட்டை



பரமக்குடி



பூதலூர்



சி.கே.மங்கலம்



அம்மாபேட்டை



நமணசமுத்திரம்



சாயல்குடி

சிவகங்கை



சிவகங்கை



காளையார்கோவில்



# உங்கள் சகோதரனிடமிருந்து

**பாசத்திற்குரிய உடனுழைக்கும் நற்செய்திப் பணிக் குடும்பமே,**

இயேசுவைக் காண விரும்புகிறோம் (யோவா 12:21) என்று வழிபாட்டுக்காக திருவிழாவிற்கு வந்திருந்த கிரேக்கர் பிலிப்பிடம் கேட்டுக் கொண்டார்கள். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாக அந்த கிரேக்கரின் ஆவல், ஏக்கம் எனக்கும் உங்களுக்கும் ஆழமாக ஏற்பட வேண்டும் என்று செபிக்கிறேன். வாழ்த்துகிறேன். நமக்கோ விண்ணகமே தாய் நாடு. அங்கிருந்து தான் மீட்பராம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வருவார் என காத்திருக்கிறோம்(பிலி 3:20) என்ற ஆழமான உணர்விலே, எதிர் நோக்கிலே இவ்வுலகில் வாழத் தீவிரமான முயற்சி எடுப்போம். இந்த உலகம் நமக்கு நிரந்தரம் அல்ல என்பதை உணர்ந்து வாழ்வோம். இயேசுவைக் காண்பதே நமது முதன்மையான நோக்கமாய் இருக்கட்டும்.

ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நாம் அனைவரும் ஒரு இடத்தில் கூடி, கொண்டாடி, உறவாடி, மகிழ்ந்து உள்ளொளி பெற்றுச் செல்லும் ஆன்மீகக் கூடுகை, கொரோனா தாக்குதலால் கிபி 2021- இல் நடைபெறாமல் போய்விட்டது. விரிவாக்கப்பட்ட உள்ளுயிர் குழுவின் திட்டமிடுதலின்படி வருகிற செப்டம்பர் 26, 27, 28 ஆகிய நாள்களில் தேவகோட்டை ஆனந்தா அருங்கொடை ஆன்மீக மையத்தில் 'வானவில்' என்ற பதாகையில் கூடுகை நடைபெற உள்ளது என்பது தாங்கள் அனைவரும் அறிந்ததே. எப்படியெல்லாம் செலவுகளை குறைக்க வேண்டும் என்று திட்டமிட்ட போதிலும் தற்போது உள்ள விலைவாசிகளின்படி அதிகப் பொருள் செலவு ஏற்படும் என்று கணிக்கப்பட்டிருக்கிறது. இது நமது கூடுகை என்ற உணர்விலே தங்கள் பங்களிப்பை, பகிர்வைத் தாராள மனதுடன் செய்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

நமது திருஅவை கிபி 2025 ஆம் ஆண்டை யூபிலி ஆண்டாக அறிவித்து கொண்டாடி வருகிற சூழலில் நம் பணிக் குடும்பம் அதைப் பொருளுள்ள விதத்தில் கொண்டாட திட்டமிட்டு பல் செயல்பாடுகளை முன்னெடுத்து வருகிறது. 'இயேசுவை காண விரும்புகிறோம்' என்ற அந்த கிரேக்கர்களின் ஏக்கம் நம் ஒவ்வொருவரிலும் வேர் விட்டு, வளர்ந்து விருட்சமாக வேண்டும். நமது வாழ்வின் இலக்கு என்ன? நம் திருஅவையின் ஆயிரக்கணக்கான புனிதர்களின் இலக்கு நம்மிடம் இருக்கிறதா? ஒட்டுமொத்த புனிதர் கூட்டத்தின் இலக்கு, 'என் இலக்கு, கடவுள் தான், மகிழ்ச்சி அல்ல, அமைதி அல்ல, ஆசிகள் கூட அல்ல என் கடவுளாகிய அவர் மட்டும்தான்' என்பது தானே. எல்லா புனிதர்களின் வாழ்க்கை நெறியின் மையம், சாரம், ஏக்கம் இதுதானே.

திருவிவிலியத்தின் பக்கங்களைத் திருப்பினால் இந்த அடிப்படையான கேள்விக்கு (என் வாழ்வின் இலக்கு என்ன) தெளிவானதும் எளிமையானதுமான பதிலை நாம் வெளிப்படையாகக் கண்டு கொள்ள முடியும்.

1. 'இஸ்ரயேலரே, உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கு அஞ்சி, அவர்தம் அனைத்து வழிகளிலும் நடந்து, அவர் மேல் அன்பு கூர்ந்து, உங்கள் முழு இதயத்தோடும் உங்கள் முழு உள்ளத்தோடும் அவருக்கு பணிபுரிந்து, உங்களுக்கு எல்லாம் நலமாகும் பொருட்டு, நான் இன்று கற்பிக்கின்ற அவர்தம் கட்டளைகளையும், நியமங்களையும் நீங்கள் கடைபிடிக்க வேண்டுமென்பதன்றி அவர் உங்களிடமிருந்து வேறு என்ன எதிர்பார்க்கிறார்?'(இ ச 10:12,13)

2. 'ஓ மானிடா, நல்லது எது என அவர் உனக்கு காட்டி இருக்கின்றாரே! நேர்மையை கடைப்பிடித்தலையும் இரக்கம் கொள்வதில் நாட்டத்தையும் உன் கடவுளுக்கு முன்பாக

தாழ்ச்சியோடு நடந்து கொள்வதையும் தவிர வேறு எதை ஆண்டவர் உன்னிடம் கேட்கின்றார் (மீக்கா 6:8).

3. உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் முழு மனத்தோடும் முழு ஆற்றலோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு கூர்வாயாக என்பது முதன்மையான கட்டளை (மாற் 12: 30).

எனவே திருவிவிலியம் நமது வாழ்க்கையின் நோக்கம் என்ன என்பதற்கு மேலே சொல்லப்பட்டதைப் பதிலாக தருகிறது. கடவுளை அறிந்து, அன்பு செய்து, அனுபவித்து, அவரோடு நடப்பது. ஒட்டுமொத்தத்தில் சொல்வதானால் கடவுளைக் காண்பது. இன்னும் கூர்மையாகச் சொல்வதானால், இயேசுவைக் காண்பது. 17ஆம் நூற்றாண்டில் இறையியலார்கள் உருவாக்கிய வெஸ்ட் மினிஸ்டர் நம்பிக்கை அறிக்கை மனிதர்களின் முக்கியமான நோக்கம் என்ன என்ற கேள்விக்கு இப்படி பதில் சொல்லுகிறது. 'மனிதனின் உன்னதமான நோக்கம் என்பது கடவுளை மகிமைப்படுத்துவதுடன், எல்லாகாலமும் தொடர்ந்து அவரை அனுபவிப்பதுமாகும்.'

நமது முன்னோர்களை, புத்தகங்களில் புரட்டிப் பார்க்கும்போது, இந்த வாஞ்சையில் பற்றி எரிந்திருப்பதைக் காண முடிகிறது. கடவுளை அறிந்து, அன்பு செய்து, அவரை அனுபவிக்க வேண்டும் என்ற ஒற்றை நோக்கம்தான் அவர்களிடம் இருந்தது. அதாவது 'கடவுளைக் காண வேண்டும்' என்ற தீராத வாஞ்சை நெருப்பாக அவர்களில் கனன்று கொண்டிருந்தது. அவர்களிடம் இருந்த அந்தத் தாகம், அந்தத் தேடல்கள் விசித்திரமான பாதைகளை தேர்ந்தெடுத்ததில் உணர முடிகிறது. நமது துறவிகளில் பலர் குகைகளில், மடங்களில் தங்களை தனியாக அடைத்து கொண்டு, தங்களை அடித்துக் கொண்டு, தங்களை ஒடுக்கிக்கொண்டு.அந்த தேடலின் பாதையில் சென்றார்கள். இதுதான் சரியான வழி என்று நான் சொல்ல வரவில்லை. அவர்களின் தேடலின் தீவிரத்தை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

'தூய்மையை நாடுங்கள். தூய்மையின்றி எவரும் ஆண்டவரைக் காண மாட்டார்' ( எபி 12: 14) என்ற இந்த உண்மைக்கேற்ப உலகத்தில் தங்களுக்கு இருக்கும் ஞானத்தைத் துறந்து, தங்களைத் தாங்களே துன்புறுத்தும் செயல்களில் நம் புனிதர்கள் துன்பங்களை வளிந்து ஏற்று தங்களைத் தாங்களே சிலுவையில் அறைந்துகொண்டார்கள். சில நேரங்களில் பைத்தியங்கள் போல காணப்பட்டார்கள். இதிலிருந்து கடவுளை காண அவர்களின் தேடலின் தீவிரம் புரிகிறது அல்லவா.

இன்றைக்கு நமக்கு அறிவு பெருகிவிட்டது. கடவுளைக் காண்பதற்கு தனிப்பட்ட தூய வாழ்வு அவசியம் என்று திருவிவிலியமும் நம் முன்னோர்களும் கற்றுத் தந்த பாடம் நம்மை பாதிக்கவில்லை. 'நானே, அவர் என் பக்கத்தில் நிற்க காண்பேன். என் கண்களே காணும். வேறு கண்கள் அல்ல என் நெஞ்சம் அதற்காக ஏங்குகிறது (யோபு 19: 27) என்று துன்ப உலையில் நொறுக்கப்பட்ட, சின்னா பின்னமாக்கப்பட்ட யோபு கூறுகிறார். அவருடைய எதிர்நோக்கு எப்படிப்பட்டது? நம்முடைய எதிர்நோக்கு எப்படி இருக்கிறது? என்பதை சுய ஆய்வு செய்வோம். நம்முடைய உள்ளான உலக ஆசைகள், ஏக்கங்கள், பண ஆசை, செழிப்பு, ஆசிகளுக்காக மூடநம்பிக்கைகளை பின்பற்றுவது, பல்வேறு வடிவங்களில் கடவுளை இகழ்ச்சிக்கு உள்ளாக்குவது என்று பல திசைகளில் இழுக்கப்பட்டு கொண்டிருக்கிறோம். எதிர் நோக்கின் திருப்பயணிகளாக, நம் வாழ்க்கையின் இலக்கிற்கு திரும்புவோமா? ஒருவர் மற்றவருக்காக செபிப்போம்

நம்பிக்கை உறவிலும் பணியிலும் உங்களோடு பயணிக்கும்

உங்கள் சகோதரன்

**நற்பணி அ. சகாயராஜா**

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - I பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் 06.07.2025 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 5 பேரும் இரண்டாவது குழுவில் 7 பேரும் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி G.M.S ராணி, நற்பணி S. இராஜேந்திரன், நற்பணி M. அருள் மரியநாயகம், நற்பணி S. ஆரோக்கியசாமி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - II காளையார்கோவில், தந்தை. ஜோசப் சேவியர் அரங்கில் 06.07.2025 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 4 பேரும் இரண்டாவது குழுவில் 7 பேரும் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. மரிய கிரகோரி, நற்பணி A. ஆரோக்கியசாமி, நற்பணி V. செங்கோல் மேரி, நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் பணியாளர்கள் பயிற்சி - III தங்கச்சிமடம், புனித குழந்தை தெரசாள் கோவிலில் 12.07.2025 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 3 பேரும் இரண்டாவது குழுவில் 15 பேரும் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி G.M.S ராணி, நற்பணி M. லூயிஸ் ஜான்போஸ்கோ, நற்பணி X. லூர்துமேரி, நற்பணி S. ஆரோக்கியசாமி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - IV இராமநாதபுரம், புனித செபமாலை அன்னை கோவிலில் 13.07.2025 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 4 பேரும் இரண்டாவது குழுவில் 7 பேரும் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி J. ரபேக்கா, நற்பணி A. யூஜின் அமல்ராஜ், நற்பணி A. ஆரோக்கியமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - V சிவகங்கை, வியான்னி அருள்பணி மையத்தில் 13.07.2025 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 10 பேரும் இரண்டாவது குழுவில் 5 பேரும் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M.சேவியர், நற்பணி M. சகாயமேரி, நற்பணி A. பிரான்சிஸ் சேவியர், நற்பணி S. அந்தோனி பிரகாஷ், நற்பணி L. ஆரோக்கியசாமி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VI ஓரியூர் புனித அருளானந்தர் திருத்தலத்தில் 13.07.2025 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 5 பேரும் இரண்டாவது குழுவில் 4 பேரும் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி J. ஆரோக்கியசாமி, நற்பணி S. ஆரோக்கியசாமி, நற்பணி இரா.அருள்பிரகாசம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VII அமைதியகம், காயாவயலில் 20.07.2025 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 10 பேரும் இரண்டாவது குழுவில் 10 பேரும் கலந்து கொண்டனர்.இப்பயிற்சியை நற்பணி A.சத்தியேந்திரன், நற்பணி S. சகாயராணி, நற்பணி P. அமலோற்பவ ஆரோக்கியராணி, நற்பணி தை. அமல்ராஜ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VIII சாயல்குடி, புனித ஆரோக்கிய அன்னை கோவிலில் 20.07.2025 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 9 பேரும் இரண்டாவது குழுவில் 6 பேரும் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. அருள் மரியநாயகம், நற்பணி T. ஸ்டீபன், நற்பணி J. சார்லஸ், நற்பணி A. சந்திரபுஷ்பா ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி IX இராசசிங்கமங்கலம், தூய ஆவியார் கோவிலில் 27.07.2025 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 13 பேரும் இரண்டாவது குழுவில் 4 பேரும் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி S. சகாயராணி, நற்பணி S. பால்ராஜ், நற்பணி M மரிய கிரகோரி, நற்பணி S. தைனஸ்மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டம் புதிய பணியாளர்கள் பயிற்சி - X சி.கே. மங்கலம், புனித பேதுரு கோவிலில் 20.07.2025 அன்று நடைபெற்றது. 9 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி S. அந்தோணி பிரகாஷ். நற்பணி கோ. அம்பிகா எலியாஸ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

## ஜூலை 2025 — கடந்த மாதச் செயல்பாடுகள்

02.07. 2025 அன்று காயாவயல் அமல அன்னை அமைதியகத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 35பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி A. சத்தியேந்திரன். நற்பணி A. பெமிலா. நற்பணி. இரா. அருள் பிரகாஷம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

02.07.2025 அன்று பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 75 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி. M. லூயிஸ் ஜான்போஸ்கோ. நற்பணி. சூ. ஜஸ்டின். நற்பணி. S.இருதய மேரி ஆகியோர் வழிநடத்தினர்கள்.

05.07.2025 அன்று திரு இருதய ஆண்டவர் திருத்தலத்தில் ஆவூடைப்பொய்கை வட்டார பணியாளர்கள் நற்பணி சகாயமேரி. நற்பணி ஆசைமேரி. நற்பணி லூர்து பரிமளா. நற்பணி ஜூலியா ஆரோக்கியமேரி ஆகியோர் பரிந்துரை செபத்தில் கல்நது கொண்டார்கள்

06.07.2025 அன்று புதுக்கோட்டை திரு இருதய ஆண்டவர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி J. அருள் இளங்கோ அவர்கள் நெறிபடுத்தினார்கள்.

13.07.2025 அன்று பட்டுக்கோட்டை. உலக இரட்சகர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A.R.ஆசைராஜ் அவர்கள் நெறிபடுத்தினார்கள்.

13.07.2025 அன்று பூதலூர். புனித மரியன்னை கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S. சேசுராஜா அவர்கள் நெறிபடுத்தினார்கள்.

14.07.2025 தொடர் களப்பணி சாயல்குடி பங்கு மேல கீழ்முந்தல் கிராமத்திற்கு முத்துப்பேட்டை வட்டார பணியாளர்கள் நற்பணி சகாயலதா. நற்பணி வெர்ஜினியா. நற்பணி மார்க்கஸ். நற்பணி ததேயுஸ் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டது

18.19&20 ஆண்டுத்தியானம்-I அருள்சான்று நிலையத்தில் நடைபெற்றது. அருள்தந்தை ஜெயக்குமார் MSFS அவர்கள் தியானத்தை நெறிப்படுத்தினார்கள். இத்தியானத்தில் 96 பணியாளர்கள் பங்கேற்றார்கள்.

20.07.2025 அன்று அம்மாபேட்டை. புனித லூர்துமாதா கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி I. செபஸ்தியான் அவர்கள் நெறிபடுத்தினார்கள்.

20.07.2025 அன்று திருமயம். புனித அடைக்கலமாதா கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A. சகாயராஜா. நற்பணி S. பால்ராஜ் அவர்கள் நெறிபடுத்தினார்கள்.

27.07.2025 அன்று திருவாரூர். புனித பாத்திமா அன்னை கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A. சத்தியேந்திரன். நற்பணி A.R.ஆசைராஜ் அவர்கள் நெறிபடுத்தினார்கள்.

27.07.2025 அன்று நமணசமுத்திரம். குழந்தை இயேசு கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி J. அருள் இளங்கோ. நற்பணி S.அந்தோனி பிரகாஷ் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

12.7.2025 அன்று திருச்சி அருங்கொடை இல்லத்தில் நடைபெற்ற திருச்சி மறைமாவட்ட புதிய பணியாளர்களுக்கான பயிற்சியை நற்பணி A. சகாயராஜா அவர்கள் நெறிப்படுத்தினார்கள்.

19.7.2025 அன்று மதுரையில் நடைபெற்ற மதுரை உயர்றைமாவட்ட நற்செய்திப் பணியாளர்ளுக்கான செய்தியாளர்கள் பயிறசியை நற்பணி A. சகாயராஜா அவர்கள் அவர்கள் நெறிப்படுத்தினார்கள்.

### தேவகோட்டை வட்டாரம்

தேவகோட்டை வட்டார தியானக் கூட்டம் 29/06/2025 அன்று தேவகோட்டை சகாய மாதா கோவில் வளாகத்தில் அமைந்துள்ள சகாய அன்னை கலையரங்கில் காலை 10 மணிக்கு புகழ்ச்சி வழிபாட்டுடன் தொடங்கியது. தொடர்பாளராக நற்பணி அ. சந்தியேந்திரன் கலந்துகொண்டு 'நற்செய்தி பணியாளர்களின் வாழ்வு' என்னும் தலைப்பில் செய்தி வழங்கினார். மதிய உணவுக்குப் பின் குழுப் பகிர்வு நடைபெற்றது. மன்றாட்டு, அறிவிப்பு மற்றும் கொள்கைப் பாடலுடன் மாலை 4 மணியளவில் கூட்டம் நிறைவுற்றது. 27 பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

நற்பணி **சி. கபிரியேல்,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

### செஞ்சை வட்டாரம்

செஞ்சை வட்டார தியானக் கூட்டம் 06.07.2025 ஞாயிறு காலை 10.30 மணிக்கு செஞ்சை LFRC உயர்நிலைப்பள்ளி கட்டிடத்தில் நடைபெற்றது. இறைபுகழ்ச்சி மற்றும் பாவ மன்னிப்பு வழிபாபாட்டை நற்பணி V. செல்வி திரேஸ் நற்பணி A. வேதமேரி, நற்பணி சோபியா, நற்பணி S. சகாயமேரி ஆகியோர் இணைந்து வழிநடத்தினர். நெறியாளராக கலந்து கொண்ட நற்பணி அ. சந்தியேந்திரன் பணியாளர்களின் செப வாழ்வை மையப்படுத்தி வலியுறுத்தி இறைச்செய்தி வழங்கினார். குழு பகிர்வு நடைபெற்றது. 32 பணியாளர்கள் கலந்துகொண்ட இக்கூட்டம் நன்றி செபம் கொள்கைப்பாடலுடன் மாலை 4.00 மணிக்கு நிறைவுபெற்றது.

நற்பணி M. **விசுவாசம்,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

### ம. மிக்கேல் பட்டணம் வட்டாரம்

ம. மிக்கேல் பட்டண வட்டார தியானக் கூட்டம் 06.07.2025 ஞாயிறு திருவரங்கம் நற்பணி பத்திமா ராணி இல்லத்தில் நற்செய்திப் பணியாளர்களின் தொடக்க வழிபாட்டுடன் காலை 10.30 மணிக்கு துவங்கியது. செயலர் தொடர்பாளராக கலந்துகொண்டு நற்செய்திப் பணியாளரின் வாழ்வு என்ற தலைப்பில் செய்தி வழங்கி நெறிப்படுத்தினார். நண்கல் உணவிற்குபின் குழுப்பயிர்சி நடைபெற்றது. 16பேர் கலந்து கொண்ட இத்தியானம் பரிந்துரை செபம், கொள்கைப்பாடலுடன் மாலை 4.00 மணிக்கு நிறைவுற்றது.

நற்பணி **அடைக்கலம்,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

### இராம்நகர் வட்டாரம்

இராம்நகர் வட்டார தியானக் கூட்டம் 13.07.2025 அன்று அமைதியகத்தில் காலை 10 மணிக்கு புகழ்ச்சி வழிபாட்டுடன் தொடங்கியது. தொடர்பாளராக செயலர் கலந்து கொண்டு ' நற்செய்தி பணியாளர்களின் வாழ்வு ' என்னும் தலைப்பில் செய்தி வழங்கினார். மதிய உணவுக்குப் பின் குழுப் பகிர்வு நடைபெற்றது. மன்றாட்டு, அறிவிப்பு மற்றும் கொள்கைப் பாடலுடன் மாலை 4 மணியளவில் கூட்டம் நிறைவுற்றது. 33 பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

நற்பணி S. **ஆரோக்கியசாமி,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

### சி.கே.மங்கலம் வட்டாரம்

சி.கே. மங்கலம் வட்டார தியானக் கூட்டம் 20. 7 .2025 ஞாயிறு அன்று காலை 10:30 மணியளவில் நற்பணி. இசபெல்லா அவர்களது இல்லத்தில் தூய ஆவியானவர் பாடலுடன் ஆரம்பமானது. நெறியாளராக செயலர் கலந்துகொண்டு 'நற்செய்திப் பணியாளரின் வாழ்வு' என்ற மையக்கருத்தை இறை வார்த்தை கொண்டும் அனுபவத்தைக் கொண்டும் செய்தி வழங்கி நெறிப்படுத்தினார்கள். மேலும் ,மன்றாட்டு, வானவில் கூடுகை குறித்த அறிவிப்பு, பரிந்துரை செபத்துடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது. கலந்து கொண்ட பணியாளர்களின் எண்ணிக்கை 32.

நற்பணி **எம்.டேவிட்** கண்காணிப்பாளர்

ஆண்டவரின் ஏட்டுச் சுருளை ஆய்ந்து படியுங்கள் (எசா 34:16)

நாம் ஏன் ஆண்டவரின் இந்த ஏட்டுச் சுருளை ஆய்ந்து படிக்க வேண்டும்? ஏனெனில் ஆண்டவரின் வாய் மொழிந்த கட்டளையாக அது இருக்கிறது. தொடக்க நூல் முதல் இறுதி நூலாகிய திருவெளிப்பாடு வரைக்கும் தூய ஆவியானவர்தான் இதை ஒருங்கிணைத்திருக்கிறார். கிட்டத்தட்ட நான்காயிரம் ஆண்டுகள் பழமைகொண்ட கொண்ட நூலாக அது இருக்கிறது. ஆனாலும் எந்த ஒரு முரண்பாடும் இல்லாமல் இன்றைக்கும் ஒவ்வொருவருக்காகவும் எழுதப்பட்டதுபோல அது இருக்கிறது. இது தூய ஆவியானவரின் தூண்டுதலால் எழுதப்பட்டுள்ளது. இன்று நம்மில் அனேகர் இறைவார்த்தையை அது ஒரு பகுதி மட்டுமே என்று கூறுபவர்கள் உண்டு. ஆனால் இது வார்த்தை ஒரு பகுதி மட்டுமல்மல. அதுதான் முதலும் முடிவுமாக இருக்கிறது. தொடக்கத்தில் வாக்கு இருந்தது. அவ்வாக்கு கடவுளோடு இருந்தது. அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது. அவ்வாக்கு கடவுளோடு இருந்தது. அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது. இதன் மூலம் கடவுள்தான் வார்த்தை என்பதை அறியமுடிகிறது (யோவ 1:1). நாம் நம் ஆண்டவர் இயேசுவை நம்முடைய சொந்த மீட்பராக ஏற்றுக்கொள்ளும்போது கடவுளின் பிள்ளைகளாகும் உரிமை நமக்குக் கிடைக்கிறது (யோவா 1:12). நாம் எப்படி கடவுளின் பிள்ளைகள் ஆகிறோம்? நம்மை ஈன்றெடுக்க அவர் விரும்பினார் (யாக் 1:18). அவரது வார்த்தையினால்தான் நாம் மறுப்பிறப்படைகிறோம். கடவுளின் இந்த வார்த்தையில் நம்மை உயிர்பிக்கும் ஆற்றல் உள்ளது. எனவேதான் கடவுளின் வார்த்தை உயிருள்ளது. ஆற்றல் வாய்ந்தது இரு பக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினு கூர்மையானது. ஆன்மாவையும் ஆவியையும் பிரிக்கும் அளவுக்கு குத்தி ஊடுருவுகிறது. உள்ளத்தின் சிந்தனைகளையும் நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது என்று கடவுளின் வார்த்தையின் மேன்மைகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன (எபி 4:12). கடவுளின் வார்த்தை யாருக்கு உயிருள்ளதாய் இருக்கும்? மகிழ்ச்சியுறுவர். அவரது சட்டத்தை பற்றி இரவும் பகலும் சிந்தித்திப்பவர். அவர் நீரோடையோரம் நடப்படப்ட மரம் போல் இருப்பார். பருவகாலத்தில் கனி தந்து என்றும் பசுமையாய் இருக்கும் அம்மரத்திற்கு ஒப்பாவார். நாம் செய்வதனைத்திலும் வெற்றி பெறுவார் (திபா 1:1-3). கடவுளின் இந்த வார்த்தைகள் மீது இத்தகைய தாகம் உள்ளவர்களுக்கு வாழ்க்கையில் எல்லா நிலையிலும் வெற்றி உறுதி புதிதாய் பிறந்த குழந்தைகளைப் போல வஞ்சகமற்ற வார்த்தையாகிய பாலை அருந்த ஆர்வமுள்ளவர்களாய் இருங்கள். இதை அருந்துவதால் நீங்கள் மீட்பில் வளருவீர்கள் (1 பேது 2:2). கடவுளின் இந்த வார்த்தை தூயஆவியானவர் வஞ்சகமற்றப் பால் போன்றது என்றும் இதை தினந்தோறும் பருகுபவர்கள் மீட்பில் வளருவார்கள் என குறிப்பிடுகிறார். எல்லா வகையான அழுக்கையும் உங்களிடமிருந்துள்ள தீமையையும் அகற்றி உங்கள் உள்ளத்தில் ஊன்றப்பட்ட வார்த்தையைப் பணிவோடு ஏற்றுக் கொள்ளுங்கள். அதுவே உங்களை மீட்கவல்லது என யாக்கோபு குறிப்பிடுகிறார் (யாக் 1:21). வார்த்தையான கடவுளை அவரது வார்த்தையின் வழியாகத்தான் அவரை நாம் அறிந்துகொள்ள முடியும். கடவுளின் வார்த்தை உள்ள இடத்தில்தான் அவரது தூய ஆவியானவர் இருப்பார். தொடக்கத்தில் நீரின்மீது அசைவாடிய ஆவியானவர் கடவுளின் வார்த்தை வந்ததும் செயல்பட ஆரம்பித்தார் (தொநூ 1:2). நம் தந்தையாம் கடவுள் தான் படைத்த அனைத்துக்கும் மேலாக அவரது இந்த வார்த்தையையும் அவரதுத் திருப்பெயரையும் மேன்மையுறச் செய்துள்ளார். எனவேதான் அவரது

வார்த்தைக்குஇவ்வளவு வலிமை உள்ளதாக இருக்கிறது (திபா 138:2). இரண்டாவதாக கடவுளின் இந்த வார்த்தை நம்மிடம் எப்படி வருகிறது? மழையும் பனியும் வானத்திலிருந்து இறங்கி வருகின்றன. அவை நிலத்தை நனைத்து முளை அரும்பி வளரச் செய்து விதைப்பவனுக்கு விதையையும் உண்பவனுக்கு உணவையும் கொடுக்காமல் அங்குத் திரும்பிச் செல்வதில்லை. அவ்வாறே என் வாயிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வாக்கும் இருக்கும் அது என் விருப்பத்தைச் செயல்படுத்தி எதற்காக அதை அனுப்பினேனோ அதை வெற்றிகரமா நிறைவேற்றாமல் வெறுமையாய் என்னிடம் திரும்பி வருவதில்லை (எசா 55:10-11). கடவுளின் இந்த வார்த்தை நம் வாழ்க்கையில் எவ்வாறு கடவுளின் ஆசியைக் கொண்டு வருகிறது என்பதை மிக அற்புதமாக விளக்குகிறது. நீண்ட நாட்களாக மழையில்லாமல் வறண்டு கிடக்கிற நிலத்தில் மழையும் பனியும் வந்து விழும்போது நிலம் நனைகிறது. நிலத்தின் தன்மை மாறுகிறது. மழைத்துளி விழும்போது நிலம் நனைந்து வறட்சி நீங்குகிறது. பின்பு அந்த நிலத்தில் விதைக்கப்படும் விதை முளை அரும்பி வளரச் செய்து விதைப்பவனுக்கு விதையையும் கொடுக்கிறது. உண்பவனுக்கு உணவைக் கொடுக்கிறது. அது போலவே பல்வேறு பிரச்சனைகளால் வறண்டு கிடக்கிற நம் உள்ளமாகிய நிலத்தில் கடவுளின் வார்த்தையாகிய விதை வந்து விழும்போது அது நிலத்தை குளிரச் செய்து அதைப் பண்படுத்துவது போல நம் உள்ளமாகிய நிலம் பண்படுகிறது. அங்கே வறட்சி நீங்குகிறது. முதலாவது விதைப்பவனுக்கு அது விதையைக் கொடுக்கிறது. விதை இல்லையென்றால் மீண்டும் விளைச்சலைக் காண இயலாது. எனவேதான் முதலில் நம்மிடம் நீங்காத ஆசிர்வாதம் பின்பு நம்மைச் சுற்றி உணவுக்காகக் காத்திருப்பவர்களுக்கு நம் வழியாக அந்த ஆசிரைக் கொண்டு செல்கிறது. இவற்றையெல்லாம் கூறிவிட்டு இறுதியாக ஆண்டவர் கூறுவதை கவனமாகச் சிந்தப்போம். அவ்வாறே என் வாயினின்று புறப்பட்டுச் செல்லும் வாக்கும் இருக்கும். அது என் விருப்பத்தைச் செயல்படுத்தி எதற்காக நான் அதை அனுப்பினேனோ அதை வெற்றிகரமாக நிறைவேற்றாமல் வெறுமையாய் என்னிடம் திரும்பி வராது என்கிறார். கடவுளின் வார்த்தையின் மீது நாம் தாகம் கொள்ளும்போது நம் விருப்பம் அல்ல. மாறாக நாம் நினைப்பதற்கும் வேண்டுவதற்கும் மிகவும் மேலாக அவரது விருப்பம் நம்மிலே நிறைவேறுகிறது. இந்த ஆசிரை நாம் எப்படிப் பெற்றுக் கொள்வது? விண்ணகத்திற்குப் போகிறவர் யார் என்றும் கிறிஸ்துவைக் கொண்டு வருமாறு கடல் கடந்து செல்வோர் யார் என்றும் உனக்குள்ளேச் சொல்லிக் கொள்ள வேண்டாம். அதில் சொல்லியிருப்பது இதுவே. வார்த்தை உனக்கு மிக அருகில் உள்ளது. உன் வாயில் உன் இதயத்தில் உள்ளது (உரோ 10:7-9). கடவுள் வாக்களித்ததை எடுத்து நம் நாவினால் அறிக்கைசெய்து நம் ஆண்டவர் இயேசுவின் பெயரால் எதைக் கேட்டாலும் அது அப்படியே ஆகும். (யோவா 14:14) இது கடவுளின் விருப்பம். எனவே எதிர்நோக்கின் திருப்பயணிகளாக பயணிக்கும் நாம் எதிர்நோக்கைத் தரும் நம் வானகத் தந்தையின் வார்த்தைக்கு முழுவதும் கீழ்படிவோம். கண்ணுக்குத் தெரிகிறதை நோக்கியிருப்பது எதிர்நோக்கு ஆகாது ஏற்கனவே கண்ணால் காண்கிறதை எவராவது எதிர்நோக்குவாரா? நாமோ காணாத ஒன்றை எதிர்நோக்கி இருக்கும்போது அதற்காகத் தளரா மனத்தோடு காத்திருக்கிறோம்.(உரோ 8:24-25) அந்த எதிர்நோக்கு ஒரு போதும் ஏமாற்றம் தராது. ஏனெனில் இது கடவுளின் அன்பினால் நிரப்பப்பட்ட எதிர்நோக்கு இது ஏற்றம் தரும் எதிர் நோக்கு (உரோ.5:5)

நற்பணி **ம.விசுவாசம்,** செஞ்சை.

# முகமலர்ச்சியோடு கொடுங்கள்

கொடுப்பதற்கு பணம் மட்டும் போதாது நிறைய மனமும் வேண்டும். கொடுக்கிற அளவைவிட கொடுக்கிறவன் இதய சிந்தை அதிக விருப்பம் உள்ளதாக இருக்க வேண்டும் (லூக் 21:1-4). அத்தகைய மனம் பிறரைக் கெடுக்க நினைத்தது. அது கொடுத்து வாழ நினைக்கும். ஆகவே கொடுங்கள் கொடுப்பது நமக்கு மகிழ்ச்சியை மட்டுமல்ல ஆத்ம நிறைவையும் இறை அருளையும் பெற்றுத் தருகின்ற காரணியாக இருக்கிறது. இறைபுகழ் எப்படி இறை நெருக்கத்தைப் ஏற்படுத்துகிறதோ அதுபோல கொடுக்கும் குணமும் இறை நெருக்கத்தை பெற்றுத் தருகிறது. கொடுப்பது இறைவனின குணம் ஆகவே கொடுத்துக்கொண்டே இருங்கள்.

**கொடுப்பது இறைப் பண்பு:** கடவுள் கொடுத்துக் கொண்டே இருக்கிறார். கடவுள் தாம் படைத்த அனைத்தையும் மனிதர் ஆளும்படி கொடுத்தார். நாம் வாழ்வதற்குத் தேவையான காற்று, மழை, வெளிச்சம் ஆகிய அனைத்தையும் அவர் நமக்கு இலவசமாகக் கொடுத்திருக்கிறார். தாம் கொடுப்பதை எப்போதும் அவர் நிறுத்துவதில்லை. மாறாக, தாம் கொடுப்பதை ஒரு நாள் மட்டும், ஏன் ஒரு மணி நேரம் மட்டும் கொடுக்காமல் நிறுத்துவாரென்றால், நாம் அனைவரும் அழிந்து போய்விடுவோம். அது மட்டுமல்ல அன்பை, அருளை, ஆறுதலை, ஆசிரை, சமாதானத்தை, மகிழ்ச்சியை என அனைத்தையும் கொடுத்தார். எல்லாவற்றிற்கும் மேலாக, மனிதகுல மீட்புக்காகத் தம் உயிரையும் கொடுத்தார். இறைவனின் இணையற்ற தியாகத்தை வெறும் வார்த்தைகளால் வருணிக்க முடியாது. கொடுத்தலில் இறைவன் பிரியப்படுகிறார் (2கொரி9:12,13) ஆகவே ஒருவர் கொடுக்கிறவராக விளங்கும்போது அவர் இறைப் பண்பை உடையவராக இருக்கிறார் (2 கொரி9:7). கொடுக்க வேண்டும் என்ற எண்ணமும் தாராளமாய் கொடுப்பதும் தூய ஆவியானவரின் துணையால் வரும் பண்பு. ஆகவே தாராளமாய் கொடுங்கள்.

> நிறைவாக விதைப்பவர் நிறைவாக அறுவடை செய்வார் (2கொரி 9:6)

**கொடுத்தல் இறைவனின் கொடை:** இந்த உலகில் நமக்கென்று எதுவும் இல்லை. 'மண்ணுலகம் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை. நிலவுலகும் அதில் வாழ்வனவும் அவருக்கே சொந்தம் (திபா24:1). 'வெள்ளி எனக்கு உரியது, பொன்னும் எனக்குரியது' (ஆகா 2:8) என்கிறார் படைகளின் ஆண்டவர். நம்மிடத்தில் உள்ளவைகள் அனைத்தும் கடவுளுக்குச் சொந்தமானவை. நம்முடையது என்று எதையும் உரிமை கொண்டாட முடியாது. நம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. நாம் வெறும் பொறுப்பாளர்கள், நாம் உரிமையாளர்கள் அல்ல. அனைத்திற்கும் உரிமையாளர் ஆண்டவர்தாம் என்பதை நாம் அறிந்திருக்கவேண்டும். ஆக, நாம் கடவுளைச் சார்ந்துதான் நாம் வாழ்கின்றோம், இயங்குகின்றோம், இருக்கின்றோம (திப 17:28) என்பதை புரிந்து செயல்பட வேண்டும். இதை உணர்ந்த யோபு 'என் தாயின் கருப்பையினின்று பிறந்த மேனியனாய் யான் வந்தேன். அங்கே திரும்புகையில் பிறந்த மேனியனாய் யான் செல்வேன்' (யோபு 1:21) என்கிறார். ஆக கடவுளுடையதை கடவுளுக்கென கொடுக்க கடமைப்பட்டிருக்கிறோம்.

**கொடுப்பதால் வரும் நன்மை:** கொடுக்காமல் எதையும் பெற்றுக்கொள்ள முடியாது. இழப்பதன் மூலமாகத்தான் பெற்றுக்கொள்ள முடியும். கொடுப்பது பெற்றுக்கொள்வதும், விதைப்பதும் அறுப்பதும் என்கிற விதிக்கு ஒப்பானதாகும். விதைக்கும்போது கொஞ்சமாக தானியத்தை விதைக்கிறோம். ஆனால் அறுவடை செய்யும் போது விதைத்ததைவிட பல மடங்கு பெருகச் செய்து இறைவன் கொடுக்கிறார். ஆனால், பலர் விதைக்காமல் அறுவடை செய்வதிலேயே ஆர்வமாய்

இருக்கிறார்கள். 'குறைவாக விதைப்பவர் குறைவாக அறுவடை செய்வார். நிறைவாக விதைப்பவர் நிறைவாக அறுவடை செய்வார்' இதை தெரிந்து கொள்ளுங்கள். ஒவ்வொருவரும் தம்முள் தீர்மானித்தபடியே கொடுக்கட்டும். மனவருத்தத்தோடோ கட்டாயத்தினாலோ கொடுக்க வேண்டாம். முகமலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்கு உரியவர். கடவுள் உங்களை எல்லா நலன்களாலும் நிரப்ப வல்லவர். எந்த சூழ்நிலையிலும் எப்போதும் தேவையானதெல்லாம் உங்களுக்கு மிகுதியாகவே தருவார். விதைப்பவருக்கு வேண்டிய விதைகளை வழங்கி அவை முளைத்து வளரச் செய்து அறச்செயல்களாகிய விளைச்சலை மிகுதியாகத் தருவார். நீங்கள் எல்லா வகையிலும் செல்வர்களாகி வள்ளன்மை மிகுந்தவர்களாய் விளங்குவீர்கள்(2கொரி 9:6-11). ஆகவே நாம் எப்படி கொடுக்கிறோமோ அதற்கு ஏற்றபடி இறைவன் கைமாறு அளிப்பார் (மத் 7:2). கொடுப்பது ஒரு வகையான சேமிப்பு. அது கொடுப்பவருக்கு ஏராளமான நன்மைகளை கொண்டு வரும் (2 கொரி 8:2). ஆகவே முகமலற்ச்சியோடு கொடுங்கள். உங்களுக்கு கொடுக்கப்படும் அமுக்கி குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும் (லூக் 6:38). இதை புனித பவுல் பிலிப்பிய மக்களுக்கு தெளிவுப்படுத்துகிறார். 'நான் உங்கள் நன்கொடைகளை நாடவில்லை மாறாக உங்கள் கணக்கில் நற்பயன்கள் பெருகவேண்டும் என்றே விரும்புகிறேன். இது கடவுளுக்கு உகந்த பலியாகும். என் கடவுள் கிறிஸ்து இயேசுவின் வழியாய் தம் ஒப்பற்ற செல்வத்தைக் கொண்டு உங்கள் தேவைகள் அனைத்தும் நிறைவு செய்வார் (பிலி 4:17,19). இதேபோல கொரிந்திய மக்களுக்கும் இந்த உன்னதமான அறப்பணியில் முழுமையாக ஈடுபடவேண்டும் என்பதை வலியுறுத்தி கூறுகிறார் (2 கொரி 8:1-7). ஆகவே முகமலர்ச்சியோடு தாராளமாய் கொடுங்கள்.

கொடுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும் (லூக் 6:38)

**கொடுக்காததால் வரும் தீமை:** அ) தொடக்ககாலத் திருஅவையில் மக்கள் அனைவரும் ஒன்றாய் இருந்தனர். (திப5:1-11) அவர்களுள் எவரும் தனது உடைமைகளைத் தம்முடையதாகக் கருதவில்லை. நிலபுலன்கள் பிற உடைமைகளும் உடையோர் அவற்றை விற்று அனைவருக்கும் பகிர்ந்து கொடுத்தனர். அப்படியிருக்க, அனனிய சப்பிரா தம்பதியர் தங்கள் நிலத்தை விற்ற தொகை முழுவதையும் கொடுக்காமல் ஒரு பாதியை வைத்துக்கொண்டு தூய ஆவியானவருக்கு எதிராகப் பொய் சொன்னதால் இருவரும் இறந்து போனார்கள்.

ஆ) கொசோன் என்ற பெரும் பணக்காரர் திடீரென காணாமல் போனார். அவரது குடும்பத்தார் அதிக செலவு செய்து தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகையால், அவரது வீட்டை விற்கும் பரிதாப நிலைக்கு வந்தனர். வீட்டை வாங்கியவர், அந்த இடத்தில், புதிய வீட்டைக் கட்டுவதற்கு, பழைய வீட்டை இடிக்க ஏற்பாடு செய்தார். வீட்டை இடிக்கும் போது தரையில் ஒரு ரகசிய அறை இருப்பதைக் கண்டார்கள். அந்த அறைக்குள் ஏராளமான பொன் செல்வங்களுடன் ஒரு உருவிழந்த உடலும் கிடந்தது. நடந்தது என்ன தெரியுமா? வழக்கம்போல ரகசிய அறைக்குள் இறங்கிய பணக்காரர், தானியங்கி கதவின் சாவியை எடுத்துச் செல்ல மறந்துவிட்டார். இப்படியொரு அறை இருப்பது வீட்டாருக்கே தெரியாது. யாருக்கும் கொடுக்காத அந்த கஞ்சனுடைய பணம் அவருக்கே ஆபத்தாய் மாறியது.

ஆகவே 'இறை மகிமைக்காக தாராளமாய் முகமலர்ச்சியோடு கொடுங்கள் அப்போது உங்கள் கைமாறு மிகுதியாய் இருக்கும். நீங்கள் உன்னதக் கடவுளின் மக்களாய் இருப்பீர்கள் (லூக் 6:31-35).

நற்பணி **ஆரோக்கியசாமி.ஜே**

# அணிந்து கொள்வோம் படைக்கலன்களை

'எந் நிலையிலும் நம்பிக்கையென்னும் கேடயத்தைப் பிடித்துக் கொண்டு தீயோனின் தீக்கணைகளையெல்லாம் அணைத்து விட முடியும்'(எபே 6:16).

ஆவிக்குரிய போராட்டத்தில் போராடி வெற்றி வாகை அணிந்து கொள்ள நாம் பயன்படுத்த வேண்டிய படைக்கலன்களைப் பற்றித் தொடர்ந்து தியானித்து வருகின்றோம். உலகுக்குரிய வாழ்வு வாழ்வது எளிதான அகன்ற வழியில் செல்லும் மகிழ்ச்சியான வாழ்வாகும். ஆவிக்குரிய வாழ்வு என்பது போராட்டம் நிறைந்த, துன்பமான, இடுக்கமான வழியைக் கொண்ட வாழ்வு. இறுதியில் நாம் அடையப் போகும் இடம் நாம் பயணிக்கின்ற வழியைப் பொறுத்துதான் தீர்மானிக்கப்படுகிறது. அன்பே உங்கள் வாழ்வுக்கு ஆணிவேரும் அடித்தளமுமாக இருப்பதாக என்று புனித பவுல் அடியார் கூறி இருப்பது போல நம்பிக்கையே நமது நிலை வாழ்வுக்கு ஆணிவேரும் அடித்தளமு மாக இருக்க வேண்டும்.

நம்பிக்கை என்பது நம்மைக் கடவுளை நோக்கி மட்டும் பார்க்க வைத்து, அவர் காட்டும் வழியில் பயணிக்க வைக்கின்றது.'ஆண்டவருக்கு அஞ்சுவோரே அவரிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். உங்களுக்கு கைமாறு கிடைக்காமல் போகாது'(சீராக்2:8) ஆண்டவருக்கு அஞ்சி வாழ்வதே ஞானத்தின் தொடக்கம் என்று நாம் அறிவோம். ஞானம் என்பது ஆண்டவரோடு உள்ள உறவினால் நாம் பெறுகின்ற ஆற்றல். அத்தகைய ஆற்றல் பெற்றிருக்கின்றவர்கள் நம்பிக்கை கொண்டு வாழும் போது நமக்கு கைமாறு கிடைக்கும். நாம் ஒவ்வொருவரும் எதிர்நோக்கி இருக்கும் கைமாறு நிலை வாழ்வு தான். நம்பிக்கை வாழ்வு வாழும் போது நமக்கு இவ்வுலக வாழ்வுக்கான கைமாறும் நாம் எதிர்நோக்கி வாழ்கின்ற நிலை வாழ்வாகிய கைமாறும் கிடைக்காமல் போகாது.

நாம் எல்லாருமே நம்பிக்கை வாழ்வு வாழ வேண்டும் என்று தான் ஆசைப்படுகின்றோம். எங்களுக்கு நம்பிக்கையைத் தாரும் என்று செபிக்கின்றோம். ஆனால், நம்பிக்கையை வாழ்வாக்குவதற்கான சூழ்நிலை நமக்கு வரும்போது நம்மால் நம்பிக்கையில் நிலைத்து நிற்க முடியாமல் தளர்ந்து போகின்றோம்.இஸ்ராயேல் மக்கள் முறுமுறுத்தது போலவும் புலம்பியது போலவும் நாமும் வாழ ஆரம்பித்து விடுகின்றோம். இந்த இடைவெளியைப் பயன்படுத்தி அலகை அவநம்பிக்கையென்னும் தீக்கனையை நம் மீது வீசி தாக்குதல் நடத்துகின்றான்.

ஆண்டவருக்கு அஞ்சவோர் எதற்கும் நடுங்கவோ தயங்கவோ மாட்டார்கள். ஏனெனில் அவரே அவர்களது நம்பிக்கை'(சீஞா34:14) இந்த வார்த்தையை வாசிக்கும் போது நமது நம்பிக்கை வாழ்வில் நாம் எவ்வளவு பின்தங்கியிருக்கின்றோம் என்று நம்மை நாமே சற்று ஒரு ஆய்வுக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும். நம்மில் எத்தனை பேர் எதற்கெடுத்தாலும் பயந்து நடுங்கிக் கொண்டிருக்கின்றோம். ஆண்டவரையே நமது நம்பிக்கையாகக் கொண்டு வாழும் போது எல்லாமே அவர் பார்த்துக் கொள்வார் என்ற உறுதியான மனநிலை நமக்குள் உருவாகிவிடும். எதைக் குறித்தும் பயந்து நடுங்க மாட்டோம். கவலைப்பட மாட்டோம்.'மனக்கவலை மனிதனின் இதயத்தை வாட்டும்'(நீமொ13:25) ஆண்டவரில் நம்பிக்கை கொள்ளாத மனிதர்கள் தான் கவலைப்படுவார்கள். அப்படி நாம் படுகின்ற கவலை நம்மை, நம்முடைய இதயத்தை வாட்டி நம்மை அமைதியாக வாழ விடாது துன்புறுத்துகிறது. நமது தூக்கத்தை கெடுத்து உடல் நலனுக்கு கேடு வருவிக்கின்றது. வாசிக்கிற இறை வார்த்தைகளையும் அவர்களுக்குள் தங்க விடாது என்று இயேசு ஆண்டவர் விதைப்பவர் உவமையில் கூறியிருக்கின்றார். 'இறைவார்த்தையை கேட்டும் உலகக் கவலையும் செல்வ மாயையும் ஏனைய தீய ஆசைகளும் உட்புகுந்து வார்த்தையை நெருங்கி விடுவதால் பயன் அளிக்க

மாட்டார்கள்' (மாற்4:19). இறைவார்த்தையை ஆவலோடு கேட்டாலும் முட்புதர்களைப் போல இருக்கும் கவலை, செல்வமாயை, ஏனைய தீமைகள் நமக்குள் புகுந்து அதை தியானிக்க முடியாதபடி மறந்து விடச் செய்கின்றது. இதில் ஆண்டவர் முதலிடத்தைக் கவலைக்குக் கொடுத்திருக்கிறார். கவலை எதனால் வருகிறது? கடவுள் நம்பிக்கை நமக்கு இல்லாததால் தான் கவலை வருகிறது. இறை நம்பிக்கை நமக்குள் வேரூன்றி இருந்தால் எல்லாம் அவர் பார்த்துக் கொள்வார் என்றும், நம் வாழ்வில் நடக்கும் அனைத்தும் அவரது திருவுளப்படி தான் நடக்கிறது என்றும் நம்புவோம் அப்போது தான் நாம் கவலையின்றி நலமுடன் வாழ முடியும்.

'மனக்கவலை மனிதனின் இதயத்தை வாட்டும்' (நீமொ 12:25) நம்மில் பலரது இதயங்களை வாட்டிக் கொண்டிருப்பது கடந்த காலக் கசப்பான நினைவுகளும் எதிர்காலம் பற்றிய தேவையற்ற பயங்களுமே. இவை இரண்டும் கவலையாக உருவெடுத்து உணவு உறக்கத்தைக் கெடுத்து விடுகிறது. விண்ணையும் மண்ணையும் படைத்த ஒரே இறைவனை நம்புகிறேன் என்று ஒவ்வொரு நாளும் நாவால் அறிக்கை செய்து விட்டு கவலைப்படுவதால் அவரை ஒவ்வொரு நாளும் மறுதலிக்கின்றோம். நம்மை கடவுளிடமிருந்து பிரிக்க அலகை கவலை என்ற தீக்கணையைப் பயன்படுத்துகிறான் என்பதை அறிந்து கொள்வோம்.'உங்கள் கவலைகளையெல்லாம் அவரிடம் விட்டு விடுங்கள் ஏனென்றால் அவர் உங்கள் மேல் கவலை கொண்டுள்ளார்'(2பேது5:7) இந்த இறை வார்த்தையை ஆழமாக தியானித்து கடவுளை நம்பி நம்முடைய கவலைகளை அவரிடம் விட்டு விடுவோம் ஏனென்றால் அவர் நம் மீது கவலை கொண்டுள்ளார். ஆகாரைக் கண்டவர் சக்கேயுவைக் கண்டவர் நம்மையும் காண்கிறார். ஆபிரகாம் லிங்கன் ஒரு பேட்டியில் கடவுளின் பிரசன்னம் என்னோடு எப்போதும் இருக்கின்றது என்பதை நான் நம்புகிறேன்.ஆனால் நான் கடவுளின் பிரசன்னத்தில் இருக்கிறேனா என்பதுதான் என்னுடைய பெரிய கவலை என்றாராம். கடவுள் எப்போதும் என்னோடு இருக்கிறார் என்று ஆபிரகாம் லிங்கனை போல நம்புவோம் நாமும் அவரது பிரசன்னத்தில் இருந்து அலகையின் தீக்கணைகளை எதிர்த்து நிற்க நம்பிக்கை எனும் கேடயத்தை ஏந்தி நிற்போம்.

நற்பணி **ச.சகாயராணி**, இராம்நகர்.

## காலம்

'ஒவ்வொன்றுக்கும் ஒரு நேரமுண்டு. உலகில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒரு காலமுண்டு.' (ச உ 3:1).

நம் பூமியில் உள்ள காலத்தை வைத்து கடவுளின் காலத்தை நாம் கணக்கிட முடியாது ஏனெனில், ஆயிரம் ஆண்டுகள், உம் பார்வையில் கடந்துபோன நேற்றைய நாள் போலவும் இரவின் ஒரு சாமம் போலவும் உள்ளன. (தி.ப90:4). கடவுள் சில நேரங்களில் செயல்படுவதற்கு காலம் தாழ்த்துகின்றார் .அதுவும் நமது நலனுக்காகத்தான் உள்ளது. இஸ்ரேல் மக்கள் எகிப்தில் அடிமைப்பட்டிருந்த 400 வருடங்களில் அவர்கள் கடவுளை நோக்கி முறையிட்டுக்கொண்டேதான் இருந்தனர். ஆனால் கடவுள் அவர்களை வலிமையுடையவர்களாக மாற்றியும் மோசேயை அனுப்பி மீட்கும் போதும் பார்வோனின் மனதை கடினப்படுத்தி பல அற்புதங்களை இஸ்ரயேல் மக்கள் காணச்செய்து நம்பிக்கை ஊட்டினார். அடிமைப்படுத்தியிருந்த மக்களிடமே அவர்கள் அடிமையாக இருந்ததுக்கு கூலியை பெற்றுக்கொடுத்து மீட்டு வந்தார். பாலைநிலத்தில் நாற்பது வருடங்கள் நடக்க செய்து அவர்களுக்கிடையில் இருந்த தீயவர்களை முற்றிலும் அழித்து ஒழித்த பின்பே அவர்களை கானான் நாட்டை அடையச்செய்தார். அதுபோல நம்முடைய வாழ்க்கையில் இஸ்ரயேல்

மக்களுக்கு கடவுள் கொடுத்தது போல சோதனைக் காலம், தயார் செய்யும் காலம், பயிற்சி காலம், தேர்ச்சிகாலம், இளைப்பாறுதல் காலம் போன்றவை இருக்கலாம். எல்லாம் நன்றாக இருக்கும்போது கடவுளை ஆராதிப்பது எளிது. ஆனால், துன்பம் அடுத்தடுத்து வந்து நம் வாயிலை எட்டிப்பார்க்கும் போதும், நம் செபங்களுக்கு அவரிடம் இருந்து பதில் கிடைக்காதபோதும் என்ன செய்வோம்?

அந்த இஸ்ராயேல் மக்களின் நம்பிக்கையும் எகிப்தில் சோதிக்கப்பட்டது போல சோதிக்கப்படுகிறது. நாம் எந்த காலத்தில் இருந்தாலும் நாம் ஒருபோதும் தனியாக இல்லை. ஏனெனில் கடவுள் சொல்கிறார்: 'அஞ்சாதே, நான் உன்னுடன் இருக்கிறேன்; கலங்காதே, நான் உன் கடவுள், நான் உனக்கு வலிமை அளிப்பேன்; உதவி செய்வேன்; என் நீதியின் வலக்கரத்தால் உன்னைத் தாங்குவேன்..' (எசா 41:10).

நாம் எந்த காலத்தில் இருந்தாலும் க்டவுள் நம்மை விட்டு விலகுவதில்லை . நம்மை வலுப்படுத்தி வழிவமைக்கிறார். நாம் இப்போது எந்த காலத்தில் இருக்கிறோம். ஏனோக்கு கோல கடவுளோடு இன்னும் நெருக்கமாக எப்படி நடக்கலாம். சிந்திப்போம்.

எது எப்படி இருந்தாலும் திருப்பாடல் 23 ல் உறுதிப்படச் சொல்வது போல ஆண்டவரே என் ஆயர்: எனக்கேதும் குறையில்லை உறுதியாக இருப்போம்.

நற்பணி **ஜஸ்டின்,** பாம்பன்

## இது சாத்தியமா ?

'உனது நம்பிக்கை உன்னை குணமாக்கிற்று'; 'அம்மா உமது நம்பிக்கை பெரிது. நீர் விரும்பியவாறே உமக்கு நிகழட்டும்'; 'உங்களுக்கு இன்னும் நம்பிக்கை இல்லையா?' என்று நம்பிக்கை பற்றி விவிலியத்தில் அதிகமாய் பார்க்கின்றோம்.

நம்பிக்கை என்பது ஆவியானவரின் கொடைகளில் ஒன்று; அவரால் அருளப்படுவது என் நம்பிக்கையை வளர்த்துக்கொள்ள நான் என் சொந்த முயற்சிகளை எப்படி மேற்கொள்வது என்ற கேள்வி வெகு நாள்களாக என் மனதில் இருந்ததுண்டு. சமீபத்தில் நடந்த புத்துயிர் செபத்தில் இதற்கான விடை கிடைத்தது.

நம்பிக்கை என்ற கொடை ஆவியானவரால் வழங்கப்படுகின்ற கொடை என்பது உண்மைதான். அதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் வழங்கப்படுகின்ற அந்த நம்பிக்கை என்னும் கொடையை நம்மில் நிலை நிறுத்தவும் தொடர்ந்து நம்பிக்கையில் வளரவும் நாம் சில பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அவை எவை?

நமக்குள்ளாய் 'அகப்பேச்சு' நடந்து கொண்டே இருக்க வேண்டும் என்பதே எனக்குக் கிடைத்த விடை. 'நெஞ்சே ஆண்டவருக்காக காத்திரு; மன உறுதி கொள்; உன் உள்ளம் வலிமை பெறட்டும்; ஆண்டவருக்காக காத்திரு.' (திபா27:14) 'நேர்மையாளருக்கு நேரிடும் தீங்குகள் பல; அவை அனைத்தினின்றும் ஆண்டவர் அவர்களை விடுவிக்கின்றார்.' (திபா 34:19). 'என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு! என் முழு உளமே! அவரது திருப் பெயரை ஏத்திடு!' (திபா.103:1) என்று தாவீதைப்போல அறிக்கையிட்டுக் கொண்டே நமது 'அகப்பே பேச்சை' அதிகமாக்கும் போது நம்பிக்கை எனும் கொடையை நம்மில் வேரூன்றச் செய்யவும் நம்பிக்கை இன்னும் நம்மில் வளர்வதும் சாத்தியமே!

-நற்பணி J.**அருள் இளங்கோ**, இராம்நகர்.

# வட்டார தியானக் கூட்டம்

| வ.எ | தேதி | வட்டாரம் | தொடர்பாளர் |
|---|---|---|---|
| 1. | 03 | மானாமதுரை<br>9442857812 | செயலர்<br>9787967272 |
| 2. | 03 | இடைக்காட்டூர்<br>9442857812 | நற்பணி A. தனிநாயகம்<br>9486037889 |
| 3. | 03 | புளியால்<br>9787491588 | நற்பணி J. ஆரோக்கியசாமி<br>8248899247 |
| 4. | 03 | சருகணி<br>94435 03294 | நற்பணி A. சகாயராஜா<br>7010407853 |
| 5. | 10 | சாயல்குடி<br>6383152402 | செயலர்<br>8797967272 |
| 6. | 16 | இராமேஸ்வரம்<br>9047998614 | நற்பணி M. மரியகிரகோரி<br>986965799 |
| 7. | 16 | தங்கச்சிமடம்<br>958599844 | நற்பணி A. சகாயராஜா<br>7010407853 |
| 8. | 16 | பாம்பன்<br>9790605049 | நற்பணி A. தனிநாயகம்<br>9486037889 |
| 9. | 17 | தேவகோட்டை<br>909866732 | செயலர்<br>9787967272 |
| 10. | 17 | ஆவுடைப்பொய்கை<br>8489703006 | நற்பணி A. சகாயராஜா<br>7010407853 |
| 11. | 24 | இராஜசிங்கமங்கலம்<br>9843752061 | செயலர்<br>9787967272 |
| 12. | 27 | இராமநாதபுரம்<br>94860 37889 | நற்பணி M. சேவியர்<br>94428 57812 |
| 11. | 27 | முத்துப்பேட்டை<br>99407 45169 | நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல்<br>94432 03294 |

இப்ப இல்லாட்டி எப்ப ?
-எல்லாரோ

**படைத்தவரே எதையும் அற்பமாய்ப் பார்ப்பதில்லை.**

**நம் கண்களில் மட்டும் ஏனோ இறுமாப்புப் பார்வை.**

**இதை நாம் உணர்வது இப்ப இல்லாட்டி எப்ப?**

படைப்புகள் அனைத்தின்மீதும் நீர் அன்புகூர்கிறீர். நீர் படைத்த எதையும் வெறுப்பதில்லை. ஏனெனில் நீர் எதையாவது வெறுத்திருந்தால் அதைப் படைத்திருக்கவே மாட்டீர்! (சஞா 11:24)

| வித்தியாசமான எண்களும் அத்தியாவசியமான இறைவார்த்தைகளும் | |
|---|---|
| நம் ஆண்டவர் இயேசு தம்முடைய தூயோர் அனைவரோடும் வரும்பொழுது, நம் தந்தையாம் கடவுள் முன் நீங்கள் குற்றமின்றித் தூய்மையாக இருக்குமாறு அவர் உங்கள் உள்ளங்களை உறுதிப்படுத்துவாராக! | 1 தெசலோனிக்கர் 3:13 |

# எதிர்நோக்கால் ஏற்றம் பெற்ற அன்னை

(யூபிலி ஆண்டின் தயாரிப்பாக)

அந்தத் தாய் தனது 12 வயது மகளை இருதய அறுவை சிகிக்சை நிபுணரிடம் அழைத்துச்சென்றாள். பரிசோதித்த மருத்துவர் சிறுமி இன்னும் 3 மாதங்கள் மட்டுமே உயிரோடு இருப்பாள். அறுவை சிகிச்சை செய்தால் 30% மட்டுமே பிழைக்க வாய்ப்பிருக்கிறது. எனவே வீட்டுக்கு கூட்டிச் சென்று விடுங்கள் என்று கூறிவிட . அந்தத்தாய் மருத்துவரின் கையைப் பிடித்துக்கொண்டு 'டாக்டர் 10% பிழைக்க வழி இருந்தால் கூட பரவாயில்லை. கடவுள் அவளைக் கண்டிப்பாக காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. என் பிள்ளைக்கு வைத்தியம் பண்ணுங்கள்' என்று கண்ணீரோடு கூற மருத்துவரும் சம்மதித்தார். ஒரு வாரத்தில் ஆபரேன் தேதி குறிக்கப் பட்டது. டாக்டர் வார்டுக்கு நோயாளிகளை சந்திக்க வரும் போதெல்லாம் அந்ததாய் தன் மகளிடம் 'குறைவான வாய்ப்பிருந்தாலும் உனக்குள் இருக்கும் கடவுள் உன்னைக் காப்பாற்றுவார்' என்று கூறி உறுதிப்படுத்திக் கொண்டே இருப்பதைப் பார்த்து வியப்படைவார்.

அறுவை சிகிச்சைக்கான நாள் வந்தது. அந்த சிறுமியை அபரேன் டேபிளில் கிடத்தினார்கள். அந்த டாக்டர் வர அந்த சிறுமி 'டாக்டர் என் இருதயத்தை அறுத்து அபரேன் பண்ணுவீர்களா? 'என்று கேட்டாள். 'ஆமா ஆனால் உனக்கு அது வலிக்காது. அனஸ்தீசியா கொடுத்துவிடுவோம்' என்று சொல்ல 'அதில்லை டாக்டர் எங்க அம்மா சொல்லுவாங்க உன் இருதயத்தில் கடவுள் இருக்கிறார்ன்னு ...அவருக்கு வலிக்காம பாத்துக்கங்க டாக்டர். அபரேன் முடிந்து நான் கண்முழுச்ச பின் அவர் எப்படி இருந்தார்ன்னு நீங்க எனக்குச் சொல்லனும் 'என்று சிறுமி சொல்ல டாக்டரின் மனம் வலித்தது. அபரேன் 5 1/2 மணி நேரம் நடந்தது. இருதயத்திற்கு செல்லும் இரத்த ஓட்டங்கள் நின்றுபோக டாக்டர் மனவேதனையோடு 'உடம்பை மூடி பெறறோரிடம் கொடுத்து விடுங்கள்' என்று சொன்னவருக்கு சிறுமி சொன்னது நினைவில் ஆடியது 'கடவுள் என் இருதயத்தில் எப்படி இருப்பார் என்று கேட்டாளே. இன்று மரணித்துப் போனாளே' என்று மனதிற்குள் அழுதார். அப்போது நர்ஸ் 'டாக்டர் சிறுமிக்கு இரத்த ஓட்டம் இருக்கிறது'என்று சொல்ல வியந்து போனவர்கள் மறுபடியும் 5 1/2 மணி நேரம் அபரேன் பண்ண சிறுமி பிழைத்துக் கொண்டாள்.

டாக்டர் சிறுமிக்கு நினைவு திரும்பியவுடன் அவளைப் பரிசோதிக்க போக, சிறுமி ' டாக்டர் என் இருதயத்தில் இருந்த கடவுளைப் பார்த்தீர்களா?' என்று கேட்க, 'பார்த்தேனே! இதோ இப்படித்தான் இருந்தார் 'என்று தனக்குப் பின்னால் கையை நீட்டிக் காண்பிக்க அங்கே சிறுமியின் அம்மா நின்றிருந்தார்.

ஒரு தாயின் நம்பிக்கை நிறைந்த எதிர்நோக்கு தனது பிள்ளைக்கு புதுவாழ்வை அளிக்க வல்லது. வாழ்க்கைக்கு தேவையான வேரோட்டமான இறை நம்பிக்கை அளிக்கவல்லது. தன்னம்பிக்கையை ஊற்றி வாழ்வை வளம்பட வளர்க்க வல்லது. அன்பு என்ற மையத்தில் காய்த்து உறவுகளில் கனிந்து ஆன்மீக வாழ்விற்கும் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் பலனளிக்கவல்லது.

சாதாரண ஒரு தாயின் எதிர்நோக்கே பிள்ளையின் வாழ்வை மீட்டெடுக்க காரணியாய் இருந்ததென்றால், தெய்வத்தின் தாயாம் அன்னைமரியாவின் எதிர்நோக்கு எத்துணை உயர்வானதாக, மேன்மை பொருந்தியதாக, பொதுநன்மைகளை பொதித்து வைத்ததாக இருந்தது என்பதை மீண்டும் மீண்டுமாய் தியானித்து பார்ப்பது என்பது நமது ஆன்மீக வாழ்வுக்கு அடிநாதமாக அமையும் என்பதால் அன்னையின்

கரம் பற்றி நடப்போம். அகஸ்ட் மாதம் தேவமாதாவுக்கு அர்ப்பணிக்கபட்ட மாதம் என்பதால் அவர்களின் எதிர்நோக்கு இயேசுவுக்கு, உலக மக்களுக்கு எவ்வாறு ஏற்றம் அளித்தது என்ற சிந்தனையில் இணைவோம்.

**கடவுளின் எதிர்நோக்கு:**

முதல் மனிதன் பாவம் செய்து இறைவனை விட்டு விலகிய அந்நாளில் 'உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன் ' (தொநூ 3:15) என ஆண்டவர் கூறிய போதே அவர் மரியாவின் மூலமே மீட்பின் பாதை அமைக்கப்படும் என்பதை முன் குறித்தார். பிறக்கு முன்பே அவரைக் குறித்து திட்டமிட்டார். மாசற்ற மரியா தான் தனது அன்பு மகனை ஈன்றெடுத்து உலகிற்கு மீட்பையும் சாத்தானுக்கு அழிவையும் அந்த மகன் வழியாக அளிக்க வல்லவர் என்பதை அறிந்தே அருளிலும் தூய்மையிலும் நிரம்பியவராய் மாசற்றவராய் பிறக்க வைக்க திருவுளமானார். தமது எதிர்நோக்கை இறைவாக்கினர்கள் வாயிலாக 'இதோ, கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு அவர் 'இம்மானுவேல்' என்று பெயரிடுவார்' (எசா 7:14) என்று பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே முன்னறிவித்தார். தமது எதிர்நோக்கு அன்னைமரியாவின் வழியாக மக்கள் அனைவரும் ஏற்றம் பெற்று தம்மிடம் வந்து சேர வேண்டும் என்பதே தந்தைக் கடவுளின் ஒப்புயர்வற்ற திட்டமாய் இருந்தது. இந்த சாராம்சங்கள் விவிலியத்தின் சில பக்கங்களில் விளங்குகின்றன.

**அன்னைமரியாவின் எதிர்நோக்கு:**

அன்னை மரியாவின் ஏற்றம் பெற்ற எதிர்நோக்குக் கள் பல இருந்தாலும் அவற்றில் சிலவற்றைப் பற்றி நம் சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம்.

'திராட்சை இரசம் தீர்ந்து விட்டது ' (யோவா 2:3) இது மரியாளின் விண்ணப்பமா? என்றால் இல்லை. மெசியாவாகிய தன் மகன் பணிவாழ்வை ஆரம்பித்து விட்டார். இனி அவர் ஏற்றம் பெற வேண்டிய நேரம் தொடங்கிவிட்டது என்பதை அருள் நிறைந்தவராகிய நம்அன்னை தெரிந்து கொண்டவராய் எதிர்நோக்கோடு கூறுகிறார். 'அம்மா அது பற்றி நாம் என்ன செய்ய முடியும்? எனது நேரம் இன்னும் வரவில்லையே'. என்று இயேசு கூறினாலும் தாயின் வேண்டுதலை நிறைவேற்றுகிறார். இயேசுவால் எல்லாம் கூடும் என்பதை இறை அருளால் ஞானத்தால் அறிந்திருந்தால் தான் 'அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்' என்று மரியாவால் சொல்ல முடிந்தது. ஒரு தாயாய் மட்டுமல்ல கடைசிப்பந்தியில் இரசம் தீர்ந்து போன நிலையில் ஏமாற்றத்தோடு இருக்கும் எளிய மக்களின் தூதுவராய் அவர் பரிந்துரைத்தது இயேசுவுக்கு தமது பணியில் உந்துசக்தியாய் செயலூக்கம் தந்திருக்க வேண்டும்.

அன்னைமரியின் அந்த ஒரே ஒரு வைரவார்த்தை நமக்கும் இயேசுவின் வார்த்தைகளைப் பின்பற்றி அவரின் சொற்படி நடக்க அழைப்பு விடுக்கின்றது. நடந்தால்... வெறுமையான வாழ்க்கை தூய ஆவியானவர் என்ற நீரினால் வாழ்வின் விளிம்பு வரை நிரப்பப்பட்டு இறைஆசீரில் சுவை நிறைந்த, உயர்ந்த திராட்சை இரசம் போல இனிமை பயக்கும் .அதன் பயன் ஏழை எளியோரையும் தேவையில் உழல்வோரையும் நிறைவு பெறச் செய்யும் திராட்சை ரசமாக மாற்றம் பெறும்.

அந்த மாற்றமானது நமக்கு ஏற்றமிகு நம்பிக்கையின் திருப்பயணிகளாக விண்ணோக்கிச் செல்லும் எதிர்நோக்கை உறுதிபடுத்துகிறது. எனெனில், 'மனிதர்

அனைவருக்கும் மீட்பராம் கடவுளின் அருள் வெளிப்பட்டுள்ளது' (தீத் 2:11) 'நம்பிக்கை என்பது எதிர்நோக்கி இருப்பது கிடைக்கும் என்றும் உறுதி' (எபி.11: 1) அல்லவா!

இயேசுவின் பாடுகள் மரணத்தில் உடன் நின்று உறுதிப்படுத்தியவர் அன்னை மரியா. எத்தனை எத்தனை மரணவேதனைகள் ... அனைத்தையும்மனதில் தாங்கி அனுபவித்தவர். தன் மகன் உலகமக்களுக்காக தான் இத்தனை பாடுகளையும் ஏற்றிருக்கிறார். அனைத்து மக்களும் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு பாவமன்னிப்புப்பெற்றால் தான் விண்ணக மாட்சியில் பங்கு பெற முடியும் என்பதால் அத்தனை வியாகுலத்தையும் மௌனமாய் தாங்கிக் கொண்டார். இறை திருவுளத்திற்கு இசைந்தது முதல் இறுதிவரை அவர் அடைந்த அனைத்து துன்பங்களுமே நாம் விண்ணகப் பேரின்பத்தை அனுபவிக்க வேண்டும் என்கிற ஏற்றம் பெற்ற எதிர்நோக்கே ஆகும்.

அன்னையாம் கன்னி மரியாவின் எதிர்நோக்கை நமதாக்குவோம். நாமும் வாழ்விலும் பணியிலும் எத்தனையோ துன்பங்களை கடக்கின்றோம். ஆயினும் இறைநம்பிக்கையில் அசையாது தளரா எதிர்நோக்கை கொண்டிருக்கும் போது கிடைக்கும் மனநிறைவு , உள்ளார்ந்த மகிழ்ச்சி, அறிவெல்லாம கடந்த அமைதி... அதற்கு ஈடேது. ' நாங்கள் காண்பவற்றை அல்ல காணாதவற்றை நோக்கியே வாழ்கிறோம்' (2 கொரி 4:17-18 ) எதிர்நோக்கு அளிக்கும் உறுதிப்பாட்டுடன் வாழ முனைந்தால் தூய பவுலடியாரைப் போல நாமும் இப்படி சொல்ல முடியும்.

இயேசுவின் விண்ணேற்றத்திற்கு பின் ஏற்கனவே தூய ஆவியானவரால் நிறைந்திருந்த நம் அன்னை திருத்தூதர்களை இறைவேண்டுதலில் உறுதிப்படுத்தினார். அவர்களின் பயம், பணிவாழ்வில் நிலைப்பாடு அற்றநிலை நீங்கி ஆற்றலோடு மாற்றம் நோக்கி தன் மகனைப் போல இறையாட்சிப் பணியை வல்லமையாய் உலகம் முழுதும் சென்று அறிவிக்க வேண்டும். அனைத்து மக்களும் இயேசு அளித்த மீட்பைப்பெற்று நிலைவாழ்வில் பங்கு பெற வேண்டும். அதற்கு தூய ஆவியானவர் பொழியப்பட வேண்டும் என்ற உன்னத நோக்கில் ஒன்றிணைத்து இறைவேண்டுதலில் ஈடுபட வைத்து தூய ஆவியானவர் பொழியப்பட தனது உடனிருப்பை அளித்தார்.

மரியன்னையிடம் விளங்கிய இறைப்பற்றுறுதி உறுதிப்பாடு , தம்மோடிருப்பவர்களை உயர்த்திப் பார்க்கும் தன்மை, நம்பிக்கைப்படுத்தும் பண்பு , அவரின் உடனிருப்பு, மனிதர்கள் மேல் கொண்டிருந்த கனிவான அன்பு என்று விவரிக்க முடியாத அவரின் ஆளுமை பண்புகள் அனைத்துமே மனிதர்களை ஏற்றம் பெற வைக்கும் எதிர்நோக்கு என்ற இலக்கு நோக்கியதாகவே இருந்ததை காணலாம்.

இறுதியாக...

கடவுள், நோவா காலத்து பேரழிவிற்குப்பின் தமது உடன்படிக்கையின் அடையாளமாக வானவில்லை ஏற்படுத்தினார். உடன்படிக்கையின் பேழையாம் அன்னை மரியா மனிதர்களை அழியவிடாமல் தமது அன்பு கலந்த பரிந்துரைகளின் வாயிலாக கடவுளிடம் நமக்காக பேசிக் கொண்டிருக்கிறார் என்பது திரு அவை கொண்டிருக்கும் அடர்த்தியான நம்பிக்கையாகும். அவரின் எதிர்நோக்கை நிறைவு செய்யவும் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றவும் நாம் எதிர்நோக்கின் திருப்பயணிகளாக நம்பிக்கையுடன் விண்ணகம் நோக்கி பயணிப்போம்.

நற்பணி **ஜெஸி. P.**

# ஆகஸ்ட் 2025  நற்செய்திப் பணிக்குழு பணித்திட்டம்

| நாள் | நிகழ்வு | இடம் |
|---|---|---|
| 02.8.25 | பரிந்துரை செபம் | திரு இருதய ஆண்டவர் திருத்தலம்<br>இடைக்காட்டூர் |
| 03.8.25 | புதிய பணியாளர்கள் பயிற்சி | அருள்சான்று நிலையம். பரமக்குடி<br>காளையார்கோவில். புதுக்கோட்டை |
| 03.8.25 | வட்டாரத் தியானக் கூட்டம் | மானாமதுரை. இடைக்காட்டூர்.<br>காளையர்கோவில். |
| 06.8.25 | அருளமுது ஆதாரக்குழு<br>கூடுகை | அமைதியகம். காயாவயல்.<br>அருள்சான்று நிலையம். பரமக்குடி |
| 08.8.25 | இறையியல் கருத்தரங்கம் | புனித பவுல் குருகுலம். திருச்சி |
| 8.9&10 | ஆண்டுத் தியானம் II | அமல அன்னை அமைதியம். காயாவயல் |
| 09.8.25 | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித குழந்தை தெரசாள் கோவில். தாங்கச்சிமடம் |
| 10.8.25 | வட்டாரத் தியானக் கூட்டம் | சாயல்குடி வட்டாரம் |
| 10.8.25 | தொடர் களப்பணி | எழுவன்கோட்டை கிராமம். இராம்நகர் பங்கு<br>பூரண மங்கலம் கிராமம். சாயல்குடி. நானாக்குடி பங்கு |
| 10.8.25 | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித செபமாலை அன்னை கோவில். இராமநாதபுரம்<br>வியான்னி அருள்பணி மையம். சிவகங்கை<br>புனித அருளானந்தர் கோவில். ஓரியூர்<br>உலக இரட்சகர் கோவில். பட்டுக்கோட்டை<br>புனித மரியன்னை கோவில். பூதலூர் |
| 16.8.25 | வட்டாரத் தியானக் கூட்டம் | இராமேஸ்வரம். தாங்கச்சிமடம். பாம்பன் வட்டாரங்கள் |
| 17.8.25 | புதிய பணியாளர்கள் பயிற்சி | அமல அன்னை அமைதியம். காயாவயல்<br>புனித ஆரோக்கிய அன்னை கோவில். சாயல்குடி<br>புனித பேதுரு கோவில். சி.கே. மங்கலம்<br>புனித லூர்து அன்னை கோவில். அம்மாபேட்டை<br>புனித அடைக்கல அன்னை கோவில். திருமயம் |
| 17.8.25 | வட்டாரத் தியானக் கூட்டம் | தேவகோட்டை. ஆவுடைப்பொய்கை வட்டாரங்கள் |
| 22.23&24 | ஆண்டுத் தியானம் III | அருள்சான்று நிலையம். பரமக்குடி |
| 23.8.25 | வானவில் இயக்கக்குழு கூட்டம் | அருள்சான்று நிலையம். பரமக்குடி |
| 24.8.25 | வட்டாரத் தியானக் கூட்டம் | இராஜசிங்கமங்கலம் வட்டாரம் |
| 24.8.25 | தொடர்களப்பணி | கடலூர் கிராமம். காரங்காடு பங்கு. |
| | | மேல கீழ முந்தல். பங்கு.<br>வே.மிக்கேல்பட்டணம் பங்கு<br>சித்தார்கோட்டை. இராமநாதபுரம் பங்கு |
| 24.8.25. | புதிய பணியாளர்கள் பயிற்சி | தூய ஆவியார் கோவில். இராஜசிங்க மங்கலம்<br>புனித பாத்திமா அன்னை கோவில். திருவாரூர்<br>புனித குழந்தை இயேசு கோவில். நமணசமுத்திரம் |
| 31.8.25 | தொடர்களப்பணி | பெருமாள் குரும்பன் பட்டி. கமுதி பங்கு |

| நாள் | மையம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 03.08.25 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல்<br>நற்பணி M. அருள்மரியநாயகம்<br>நற்பணி A. ஆரோக்கியசாமி |
| 03.08.25 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி J. அருள்இளங்கோ<br>நற்பணி V. செங்கோல்மேரி<br>நற்பணி S. இராஜேந்திரன்<br>நற்பணி A. ஆரோக்கியமேரி |
| 09.08.25 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி M. மரியகிரகோரி<br>நற்பணி J. ரபேக்கா<br>நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி X. லூர்துமேரி |
| 10.08.25 | புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம் | நற்பணி G.M.S. ராணி<br>நற்பணி A. பிரான்சிஸ்சேவியர்<br>நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி J. சார்லஸ் |
| 10.08.25 | வியான்னி அருள்பணிமையம் சிவகங்கை | நற்பணி M. சேவியர்<br>நற்பணி M. சகாயமேரி<br>நற்பணி L. ஜோசப் இருதயம்<br>நற்பணி A. யூஜின் அமல்ராஜ் |
| 10.08.25 | புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர் | நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>நற்பணி S. ஆரோக்கியசாமி<br>நற்பணி A. ஆரோக்கிமேரி<br>நற்பணி இரா. அருள்பிரகாசம் |
| 17308.25 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | நற்பணி S. சகாயராணி<br>நற்பணி கோ.அம்பிகா எலியாஸ்<br>Sr. செலின் பிரபா<br>நற்பணி J. அருள்இளங்கோ |
| 17.08.25 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி G.M.S. ராணி<br>நற்பணி T. ஸ்டீபன்<br>நற்பணி M. அருள்மரியநாயகம்<br>நற்பணி J. சார்லஸ் |
| 17.08.25 | புனித பேதுரு கோவில் சி.கே. மங்கலம் | நற்பணி X. சகாயலூயிஆரோக்கியசாமி<br>நற்பணி S. இராஜேந்திரன் |
| 24.08.25 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி M. மரியகிரகோரி<br>நற்பணி S. பால்ராஜ்<br>Sr. செலின் பிரபா<br>நற்பணி P. அமலோற்பவ ஆரோக்கிய ராணி |

## தஞ்சை மறைமாவட்ட புதிய பணியாளர்கள் பயிற்சி

| நாள் | மையங்கள் | நெறியாளர்கள் |
|---|---|---|
| 03.8.25<br>I | திரு இருதய ஆண்டவர் கோவில், புதுக்கோட்டை | நற்பணி M. மரிய கிரகோரி<br>9486965799 |
| | | நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>9843490206 |
| 10.08.25<br>II | உலக இரட்சகர் கோவில் பட்டுக்கோட்டை | நற்பணி A. சகாயராஜா<br>7010407853<br>நற்பணி A.R. சூசைராஜ்<br>8248102600 |
| 10.08.25<br>II | புனித மரியன்னை அன்னை கோவில், பூதலூர் | நற்பணி L. ஆரோக்கியசாமி<br>915057931<br>நற்பணி M. லூயிஜான்பாஸ்கோ<br>944503618 |
| 17.08.25<br>III | புனித லூர்துமாதா கோவில் அம்மாபேட்டை | நற்பணி A. சத்தியேந்ரன்<br>6378405762<br>நற்பணி S. பால்ராஜ்<br>9789077287 |
| 17.08.25<br>III | அடைக்கலமாதா கோவில் திருமயம் | நற்பணி S. மேட்சஅலங்காரம்<br>9843490206<br>நற்பணி S. ஆரோக்கியசாமி<br>9047224809 |
| 24.08.25<br>IV | புனித பாத்திமா அன்னை கோவில் திருவாரூர் | நற்பணி S. மேட்சஅலங்காரம்<br>9843490206<br>நற்பணி S. அந்தோனிபிரகாஷ்<br>9787791869 |
| 24.08.25<br>IV | குழந்தை இயேசு கோவில் நமணசமுத்திரம் | நற்பணி A. சகாயராஜா<br>7010407853<br>நற்பணி S. சகாயராணி<br>9047495319 |

## ஒரு பணியளாரின் மன்றாட்டு



உம்முடைய ஞானத்தால் நாள்களை வேறுபடுத்தி, காலங்களையும் விழாக்களையும் வெவ்வேறாக அமைத்தவரே இறைவா! (சீஞா 33:8)

யூபிலி ஆண்டைக் கொண்டாட நாங்கள் எடுக்கும் எல்லா முயற்சிகளும் இறை இரக்கத்தைப் புரிந்து கொள்ளவும்,அதைப் பரப்பிடவும், பாவங்களிலிருந்து விடுபட்டு புதுப்பிறப்பு அடைந்திடவும், அமைதி, ஒற்றுமையுடன் கூடிய புது வாழ்வு வாழ்ந்திடத் தூண்டும் வகையில் அமைந்திட வேண்டும் என உம்மை மன்றாடுகிறேன்.

# புனித மாக்சிமிலியன் கோல்பே (ஆகஸ்ட் 14)



'தன் நண்பன் ஒருவருக்காக உயிர் கொடுப்பதைவிட மேலான அன்பு யாரிடமும் இல்லை' (யோவான் 15:13)

புனித மாக்சிமிலியன் கோல்பே போலந்து நாட்டில் பபியானிஸ் என்னும் சிற்றூரில் 1894 ஆம் ஆண்டு பிறந்தார். திருமுழுக்கின்போது இவருக்கு ரெய்மண்ட் என்ற பெயர் சூட்டப்பட்டது. கோல்பே என்பது இவரது குடும்பப் பெயர்.

16-வது வயதில் புனித அசிசியாரின் சபையில் சேர்ந்து மாக்சிமிலியன் என்னும் பெயர் பூண்டார். 1918 இல் தனது 24-வது வயதில் குருப்பட்டம் பெற்றார். போலந்தில் உள்ள கிராக்கோவ் என்னும் இடத்தில் பணிபுரியலானார். அங்கே தான் அவரது நீண்ட நாள் கனவு நனவானது. இளைஞர்களை ஒன்றுசேர்த்து பக்த சபை ஒன்றைத் தொடங்கினார். அமலியின் வீரர் சபை என்பது அதன் பெயர். இளைஞர் பலர் அதில் சேர்ந்து பல இடங்களில் நற்பணி புரிந்து வந்தனர்.

1939 ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போர் தொடங்கியது. ஜெர்மன் நாட்டு நாசிப் படையினர் போலந்து நாட்டைக் கைப்பற்றினர். மாக்சிமிலியனும், அவருடைய தோழர்களுள் சிலரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டனர். ஆயினும் அமல அன்னையின் திருநாளன்று எதிர்பாராத விதமாக விடுதலை செய்யப்பட்டனர்.


விடுதலை பெற்று வெளியே வந்த மாக்சிமிலியன் தனது பத்திரிகையில் போரையும், அதன் கொடூரங்களையும் கண்டனம் செய்து எழுதியிருந்தார். கோபமடைந்த நாசிப் படையினர் மாக்சிமிலியனைக் கைது செய்து இராணுவ முகாமுக்குக் கொண்டு போயினர். அங்கிருந்து அவரை ஆஸ்விட்சு என்னும் கடுங்காவல் முகாமுக்கு மாற்றினர். அங்கே போனவர் எவரும் உயிருடன் திரும்பியதில்லை.

1941 ஆம் ஆண்டு சூலை மாதம் கைதி ஒருவன் தப்பி ஓடிவிட்டான். அவன் மீண்டும் பிடிபடாவிட்டால் அவனுக்குப் பதிலாக வேறு பத்துக் கைதிகளை சுரங்க அறைக்குள் அடைப்பது என அதிகாரிகள் முடிவு செய்தனர். தப்பி ஓடிய கைதி அகப்படவில்லை. ஆகவே, கைதிகளுள் பத்துப் பேரைத் தேர்வு செய்தனர். அவர்களுள் ஒருவன் தான் சுரங்க அறைக்குச் செல்ல வேண்டியதை எண்ணி ஓலமிட்டு அழுது கொண்டிருந்தான். 'ஐயோ, என் மனைவியும், இரட்டைக் குழந்தைகளும் எனக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றனர். என் குடும்பம் என்னாவது? என்னை தயவுசெய்து விட்டுவிடுங்கள்.. என அதிகாரியிடம் மன்றாடினான்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த மாக்சிமிலியன் தானாகவே முன்வந்து அழுது கொண்டிருக்கும் கைதிக்குப் பதிலாக தான் சுரங்க அறைக்குச் செல்லத் தயார் என்றார். இராணுவ அதிகாரி அந்தக் கைதியைத் தள்ளிவிட்டு அவன் இடத்தில் மாக்சிமிலியனை நிறுத்தினான். பின்னர் கைதிகள் பத்துப் பேரும் சுரங்க அறைக்குள் அடைக்கப்பட்டனர். மூன்று வாரத்திற்குள் ஆறு கைதிகள் இறந்து விட்டனர். சுரங்கக் காவலர்கள் உள்ளே சென்று பார்த்தபோது மாக்சிமிலியனும், மற்ற மூன்று கைதிகளும் செபத்தில் ஆழ்ந்திருப்பதைக் கண்டனர். மாக்சிமிலியன் முகத்தில் மகிழ்ச்சியைக் கண்டார்கள். உடனே அவருக்கு கார்பாலிக் ஆசிட் என்ற நச்சு ஊசி போடப்பட்டது. இதனால் அவர் உயிர் துறந்தார். அன்று ஆகஸ்டு மாதம் 14 ஆம் நாள்.

இயேசுவின் வாக்கைச் செயலில் செய்து காட்டிய மாக்சிமிலியனுக்கு திருத்தந்தை இரண்டாம் ஜான்பால் 1982 ஆம் ஆண்டு புனிதர் பட்டம் வழங்கினார்.

நற்பணி **செங்கோல்மேரி,** காளையார்கோவில்




கடந்தபகுதியில் உளவியல் ஆற்றுப்படுத்தல் பற்றியும்அதன் பல்வேறு வடிவங்கள் பற்றியும் ஆற்றுப் படுத்துதலின் சரியான தவறான வரிசைகளையும் பார்த்தோம். ஆற்றுப்படுத்தல் என்பது கற்றுக் கொள்ளக்கூடிய திறன் ஆகும். அதன் அடிப்படையில் அடிப்படை ஆலோசனை திறன்கள் பற்றி இந்த பகுதியில் பார்ப்போம்.

ஆலோசகர்கள், நாடி வந்தவர்களை நன்கு புரிந்துகொள்ளவும், அவர்கள் சொல்வதைக் கேட்கவும் உதவ, ஆலோசனைத் திறன்களைப் பயன்படுத்துகிறார்கள். சுறுசுறுப்பாகக் கேட்பதன் மூலம் , நல்லுறவு கட்டமைக்கப்படுகிறது, நம்பிக்கை உருவாகிறது, மேலும் பேச்சாளர் ஆலோசகர் அல்லது கேட்பவரால் கேட்கப்பட்டு புரிந்து கொள்ளப்பட்டதாக உணர்கிறார்.

**அடிப்படைஆலோசனை திறன்கள்:**

மையக் கேட்கும் திறன்கள் என்பது அடிப்படை ஆலோசனைத் திறன்கள் அல்லது பயிற்சி பெற்ற நுட்பங்கள் ஆகும், அவை ஆலோசகர் பேச்சாளரைப் பச்சாதாபத்துடன் கேட்க உதவுகின்றன.

**மையக் கேட்கும் திறன்கள் பின்வருமாறு:**

- செயலில் கேட்டல்
- சொற்கள் அல்லாத தொடர்பைப் பற்றி அறிந்திருத்தல்
- உறவை உருவாக்குதல்

அடிப்படைஆலோசனை திறன்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

**1. கலந்துகொள்வது:** ஆலோசனையில் கலந்துகொள்வது என்பது வேறொருவரின் துணையுடன் இருப்பது, அந்த நபர் என்ன சொல்கிறார்கள் அல்லது செய்கிறார்கள் என்பதில் உங்கள் முழு கவனத்தையும் செலுத்துவது . அவர்களை தகுதியான நபர்களாக மதிப்பது என்பதாகும்.

**2. அமைதி:** ஆலோசனையில் அமைதி, நாடிவந்தவர்க்கு உள்ளடக்கம், வேகம் மற்றும் குறிக்கோள்களைக் கட்டுப்படுத்த உதவுகிறது.

இதில் ஆலோசகர் மௌனங்களையும் வார்த்தைகளையும் கேட்பது . அவர்களுடன் அமர்ந்து மௌனங்கள் ஆலோசனை செயல்முறையை எளிதாக்கும் என்பதை அங்கீகரிப்பது ஆகியவை அடங்கும்.

**3. பிரதிபலிப்பு மற்றும் பொழிப்புரை:** ஆலோசனை வழங்கும்போது பிரதிபலிப்பது 'கேட்கும் கலையின்' ஒரு பகுதியாகும். இது வாடிக்கையாளர் தங்கள்

கதை கேட்கப்படுகிறது என்பதை அறிந்து கொள்வதை உறுதி செய்வதாகும்.

உதவியாளர்/ஆலோசகர் தங்கள் கதையின் ஒரு சிறிய பதிப்பை மீண்டும் மீண்டும் சொல்லி வாடிக்கையாளருக்குவழங்குவதன் மூலம் இதை அடைகிறார். இது 'பகுப்புரை ' என்று அழைக்கப்படுகிறது .

**4. தெளிவுபடுத்துதல் மற்றும் கேள்விகளைப் பயன்படுத்துதல்:**

ஆலோசனையில் கேள்விகள் ஒரு அடிப்படைத் திறமையாக வகைப்படுத்தப்படுகின்றன. நாடிவந்தவர்கள் என்ன உணர்கிறார் என்பதைப் பற்றிய தனது புரிதலை தெளிவுபடுத்த ஆலோசகர் திறந்த கேள்விகளைப் பயன்படுத்துகிறார்.

ஆலோசனை உறவைப் பாதிக்கக்கூடும் என்பதால், வழிநடத்தும் கேள்விகள் தவிர்க்கப்பட வேண்டும் .

**5. கவனம் செலுத்துதல்** ஆலோசனை வழங்குவதில் கவனம் செலுத்துவது என்பது நாடிவந்தவர்கள் எந்தெந்தப் பிரச்சினைகளைச் சமாளிக்க விரும்புகிறார் என்பது குறித்து முடிவுகளை எடுப்பதை உள்ளடக்குகிறது.

நாடிவந்தவர்கள் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் சிக்கல்களைக் குறிப்பிட்டிருக்கலாம், மேலும் கவனம் செலுத்துவது ஆலோசகரும் நாடிவந்தவரும் சேர்ந்து சுற்றியுள்ள குறைந்த முக்கியத்துவம் வாய்ந்த சில வியங்களை அகற்றி, கவலைக்குரிய மையப் பிரச்சினைகளில் கவனம் செலுத்த அனுமதிக்கிறது.

**6. உறவை உருவாக்குதல்:** ஆலோசகர் எந்த மாதிரியான ஆலோசனையுடன் பணிபுரிந்தாலும், ஆலோசனை வழங்கும்போது நாடிவந்தவர்களுடன் நல்லுறவை உருவாக்குவது முக்கியம்.

நல்லுறவு என்பது அந்த நபருடன் ஒரு தொடர்பைக் கொண்டிருப்பதைக் குறிக்கிறது

**7. சுருக்கமாக:** ஆலோசனையில் சுருக்கங்கள் நீண்ட பொழிப்புரைகளாகும். அவை நாடிவந்தவர்கள் என்ன சொல்கிறார் மற்றும் உணர்கிறார் என்பதன் சாரத்தை சுருக்குகின்றன அல்லது படிகமாக்குகின்றன .

சுருக்கமானது வெளிவரும் முக்கிய கருப்பொருள்களைச் 'சுருக்கமாகக்' கூறுகிறது.

**8. உடனடித் தன்மை:** உடனடித் தன்மையைப் பயன்படுத்துவது என்பது, சிகிச்சையாளர் நாடிவந்தவருக்கு எவ்வாறு பதிலளிக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்துவதாகும்.

ஃபெல்தம் மற்றும் டிரைடன் (1993: 88) கருத்துப்படி, உடனடித் தன்மை என்பது 'தற்காப்புத்தன்மையை சவால் செய்வதற்கும் /அல்லது விழிப்புணர்வை அதிகரிப்பதற்கும் . ஆலோசகர் மற்றும் நாடிவந்தவரின் தற்போதைய உறவில் கவனம் செலுத்துவதற்கான முக்கிய திறமையாகும் '.

**பயனுள்ள ஆலோசனை திறன்களை எவ்வாறு பயன்படுத்துவது**

அ. உண்மையாக இருங்கள்.

உங்களுக்குப் புரியவில்லை என்றால், சரிபார்த்து மேலும் தகவல்களைக் கேட்பது சரி.

ஆ. திரும்பிப் பார்க்கும்போது சுருக்கமாக இருக்க முயற்சி செய்யுங்கள்.

பேச்சாளர்தான் பெரும்பாலான பேச்சைச் செய்ய வேண்டும்.

இ. உங்கள் சொந்த வார்த்தைகளைப் பயன்படுத்தி மீண்டும் சிந்திக்கவும்.

கிளி போல ஒலிப்பதைத் தவிர்க்க, சுருக்கமாகச் சொல்லும்போது அல்லது சுருக்கமாகச் சொல்லும்போது உங்கள் சொந்த வார்த்தைகளைப் பயன்படுத்துவது நல்லது.

ஈ. அதிர்ச்சியூட்டும் அல்லது நம்பாத குரலைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்.

இது பேச்சாளர் ஏற்றுக்கொள்ள முடியாதவர் அல்லது வித்தியாசமானவர் என்பதைக் குறிக்கலாம்.

**அசைபோடஅரைநிமிடம் :**

'அடிப்படைஆலோசனை திறன்கள் நாடி வந்தவர்ளின் வாழ்வை புரிந்துகொள்ள உதவும்.'

**சகோ. S.ஜான் ஜோ பிரபாகர். SHJ.**

மனநல ஆற்றுபடுத்துநர். பரமக்குடி.

## ஆண்டுத் தியானம் 2026 — நற்செய்தி அறிவிப்பு பணிக்குழு. சிவகங்கை

| நாள் | குழு | இடம் | தியான வழிகாட்டி | நெறியாளர்கள் |
|---|---|---|---|---|
| ஆகஸ்ட் 08,09& 10 | II | அமைதியகம் காயாவயல் | Rev.Fr. ஜெயக்குமார் MSFS தென்றல் ஆன்மீக மையம். கொடைரோடு | நற்பணி S. ஆரோக்கியசாமி நற்பணி I. செபஸ்தியான் |
| ஆகஸ்ட் 22,23& 24 | III | அருள்சான்று நிலையம் பரமக்குடி | Rev.Fr. ஜெயக்குமார் MSFS தென்றல் ஆன்மீக மையம். கொடைரோடு | நற்பணி I. புஷ்பராஜ் நற்பணி S. ஆரோக்கியசாமி |
| அக்டோபர் 10,11& 12 | IV | அமைதியகம் காயாவயல் | Rev.Fr. ஜெயக்குமார் MSFS தென்றல் ஆன்மீக மையம். கொடைரோடு | நற்பணி A. வில்லியம் நற்பணி A. மெபிலா |
| அக்டோபர் 17,18& 19 | V | அருள்சான்று நிலையம் பரமக்குடி | Rev.Fr. ஜெயக்குமார் MSFS தென்றல் ஆன்மீக மையம். கொடைரோடு | நற்பணி M. சேவியர் நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல் |
| அக்டோபர் 24,25& 26 | VI | அமைதியகம் காயாவயல் | Rev.Fr. ஜெயக்குமார் MSFS தென்றல் ஆன்மீக மையம். கொடைரோடு | நற்பணி X. சகாயதூரி நற்பணி S. தைனிஸ்மேரி |
| நவம்பர் 07,08& 09 | VII | அருள்சான்று நிலையம் பரமக்குடி | Rev.Fr. ஜெயக்குமார் MSFS தென்றல் ஆன்மீக மையம். கொடைரோடு | நற்பணி S. இராஜேந்திரம் நற்பணி சூ. ஜஸ்டின் |
| நவம்பர் 14,15& 16 | VIII | அமைதியகம் காயாவயல் | Rev.Fr. ஜெயக்குமார் MSFS தென்றல் ஆன்மீக மையம். கொடைரோடு | நற்பணி L. ஆரோக்கியசாமி நற்பணி A.R.ஆசைராஜ் |

**நற்செய்திப் பணிக்குழுவின் இணைய தளம்** www.arulchandrunilayam.org

## யூபிலி ஆண்டில் என்னை மன்னியும்

● ஆண்டவர்மேல் நம்பிக்கை வைத்திருப்பவர்களோ புதிய ஆற்றல் பெறுவர் என்பதை அறிந்தும். ஆண்டவர் மேல் முழு நம்பிக்கை வைக்காமல் வேற்றுத் தெய்வங்களின் மீது நம்பிக்கை வைத்து வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (எசா 40:31).

● உங்களால் முடிந்தவரை எல்லோரோடும் அமைதியுடன் வாழுங்கள். என்பதை மறந்து எல்லோரிடமும் பகைமையை காட்டி தான் என்ற அகந்தை கொண்டு வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (உரோ 12:18).

● உயிருள்ள இறைவன் மீது என் நெஞ்சம் தாகம் கொண்டுள்ளது. என்ற ஆவலை அறிந்தும் உம்மீதும் உமது வார்த்தையின் மீதும் தாகமற்று வெதுவெதுப்பாய் வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (திபா 42:2).

● ஆண்டவர் உம்மை வேடரின் கண்ணியினின்றும் கொன்றழிக்கும் கொள்ளை நோயினின்றும் தப்புவிப்பார் என்பதை மறந்து நோய்கள் ஆபாத்துக்கள் வரும்பொழுது இறைபாதுக்காப்பில் நம்பிக்கையின்றி வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (திபா 91:3).

நற்பணி S.P. **சவரிமுத்து**. இராம்நகர்

## செப வீரர்களுக்கு

**இம்மாத செபக் கருத்து**

⊙ சமூகங்களும். உலக நாடுகளும் போட்டியிடும் மனநிலையைத் தவிர்த்து ஒற்றுமைச் சமூகமாக வளர்ந்திட.

⊙ யூபிலி ஆண்டின் அருள்வாழ்வுச் செயல்பாடுகள் இயேசுவின் மீதுள்ள நம்பிக்கையை ஆழப்படுத்த

⊙ போர்சூழல் நிலவும் மத்திய கிழக்கு மற்றும் உக்ரைன்- ரஷ்யா பகுதியில் முழு அமைதி உருவாக.

⊙ இந்தியாவில் சனநாயக மற்றும் மதச்சார்பின்மை கோட்பாடுகளும். அமைப்புகளும் பாதுகாக்கப்பட

⊙ வானவில் கூடுகை நிகழ்வு இறைமகிமைக்கான நிகழ்வாகிடவும் தயாரிப்பு பணிகள் சிறப்புடன் அமையவும்

⊙ ஆண்டுத் தியானங்கள் நம்பிக்கை வாழ்வில் ஆழம்பெற உதவிட

**விரும்பத்தக்க செயல்பாடு:**

➤ பக்திச் செயல்பாடுகளைக் குறைத்து கிறிஸ்து மைய வாழ்வில் வரள உதவும் அருள்செயல்பாடுகளை அதிகரித்தல்.

# வட்டாரத் தியானக் கூட்டம்





























படங்களைக் கொண்டு இறைவார்த்தையை கண்டுபிடியுங்கள்?

படங்களைக் கொண்டு நினைவுக்கு வரும் இறைவார்த்தையை சட்டென்று சொல்லுங்கள் பார்ப்போம்.

துப்பு வேண்டுமா? **யாக்கோபு 1-3 அதிகாரங்களுக்குள்**











ஆண்டுத்தியானம் - I



அருளமுது ஆதாரக்குழுக்கூடுகை



அமைதியகம்



அருள்சான்று நிலையம்

(தனிச்சுற்றுக்கு மட்டும்)

**Narseithi Paniyalar**
is published on behalf of the Commission for Proclamation,
Diocese of Sivagangai from Arulchandru Nilayam (Faith Resource Development Centre), Brothers of the Sacred Heart, Ulaganathapuram,
Paramakudi - 623 707, Ramnad Dist.
www.arulchandrunilayam.org |Email: arulchandrupmk@gmail.com